Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 8.00

க.பொ.த (உ/த) 2006 மாணவர்களுக்கு

**GIT பரீட்சைக்கான கையேடு**

- 10 முழுமையான வழிகாட்டி புத்தகங்கள் (Fundamentals of IT, Mathematics for Computing, Information System & IT, Computer Programming, MS Word, MS Excel, MS Access, MS PowerPoint, Internet & e-m@il, IT & National Development)
- 3 மாதிரி வினாத்தாள்கள்
- கற்றலுக்கான குறுவட்டு CD
- MS Office Shortcut Keys

முழுத் தொகுதியும்

நம்பமுடியாத விஷேட சலுகை விலை 800/-
இம்மாதம் 20 ஆம் திகதி வரை மட்டுமே

சாதாரண விலை 1000/-

தபால் மூலம் பெற்றுக்கொள்ள :: ரூபா 850 பெறுமதியான காசுக்கட்டளையை நிலவு.com என்ற பெயரிற்கு மானிப்பாய் தபாலகத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்


நிலவு.com 275, யாழ் வீதி, மானிப்பாய். T.P :: 0777 740413

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 சித்திரை- 26 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-அவ்வல் 29 (09.05.2005) திங்கட்கிழமை இதழ்:222

# புலிகள் தீர்க்கமான முடிவெடுக்கும் காலகட்டம் நெருங்கி வருகின்றது!



## நிலைமை இறுக்கமடைவதாகவும் தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை!

(லண்டன்)

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் அரசாங்கம் திட்டமிட்டு இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு வருகின்றமை புலிகளுக்கு கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் புலிகளின் தலைமை தீர்க்கமான முடிவை எடுக்கும் சூழல் நெருங்கிவருவதுடன் நிலைமை இறுக்கமடைந்து வருவதாகவும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மீண்டும் எச்சரித்துள்ளார்.

பி.பி.சிக்கு நேற்றிரவு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளார்.

எமது மக்கள் பேரழிவைச் சந்தித்து நிற்கும் சூழலில் - நாங்கள் விடுத்த அழைப்பை முதலில் ஏற்றுக்கொண்ட அரசாங்கம் - பின்பு காலத்தை இழுத்தடித்து இதற்கெதிரான சூழ்நிலையை உருவாக்கி. இப்பொழுது எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதாகவும் ஆளும் கட்சிக்குள் இருக்கும் கட்சிகள் எதிர்ப்பதாகவும் சாட்ட முனைகிறது.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியிலிருந்து அரசாங்கமும் ஜனாதிபதியும் நழுவிச் செல்லும் தன்மையைக் காட்டுவதாகவே எங்களுக்குத் தெரிகிறது.

இந்த நேரத்தில் இப்படியான அழைப்பு விடுவதன் அர்த்தம் எமக்குப் புரியாமல் இருக்கிறது. ஏனெனில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ளது. சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நடவடிக்கையாகவே நாங்கள் இதைப் பார்க்கிறோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் கடலில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதியில் இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நல்லூரைச் சேர்ந்த வைரமுத்து மதிமுகராஜா (வயது27) என்பவரே உயிரிழந்தவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனது விடுமுறையைக் கழிப்பதற்காக காரைநகர் கசூரினா கடற்கரைக்குச் சென்ற மேற்படி இளைஞன் - கடலில் குளித்துக்கொண்டிருந்த சமயம் நீரில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக காரைநகர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் நேற்று மாலை வரை கடற்கரையிலேயே இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (52)

## பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக 1 மில்லியன் அமெரிக்க டொலர்! ஜோர்ஜ் புஷ் - கிளின்ரன் வழங்குவர்

(வொஷிங்ரன்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவும் வகையில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகளான பில் கிளின்ரனும், ஜோர்ஜ் புஷ்ஷும் வழங்கவுள்ளதாக வொஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையிலுள்ள சிறுவர்களின் நலனை மேம்படுத்தும் வகையில் புஷ் - கிளின்ரன் சுனாமி நிதியிலிருந்து இந்த தொகைவழங்கப்படவுள்ளது. இலங்கை, இந்தோனேஷியா, தாய்லாந்து மற்றும் மாலைதீவு ஆகிய சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவிவழங்கும் வகையில், 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை சேர்க்கும் திட்டத்தை இவர்கள் இருவரும் ஆரம்பித்துள்ளனர்.

புஷ் மற்றும் கிளின்ரன் இருவரும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஏ.பி. குணதிலக மற்றும் இந்தோனேஷியா, தாய்லாந்து நாடுகளின் தூதுவர்களையும் சந்தித்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பின்னரான மீள்கட்டுமானம் குறித்து கலந்துரையாடியதாக இலங்கைத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுக் கட்டமைப்புக்கெதிராக ஹெல உறுமய ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிக ஹெல உறுமய நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

வடக்கு-கிழக்குப் பகுதிக்கு நேரடி வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதை உறுதிசெய்யும் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

பொறளையில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்குகள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பெருமளவானோர் இதில் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஓமல்பே சோபித தேரர், அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய வான் பாதுகாப்பு சாதனங்களை புலிகள் கொள்வனவு செய்துள்ளனர்!

## விமானப் படையினர் நம்புவதாக கொழும்பு ஆங்கில வார இதழ் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இரணைமடுப் பகுதியில் அமைத்துள்ள விமான ஓடுபாதை தளத்தையும் மற்றும் அவர்களது விமானப் படைக்கான செயற்பாடுகளைப் பாதுகாப்பதற்கும் புதிய இலத்திரனியல் பாதுகாப்புச் சாதன்ங்களைப் பெற்றுள்ளதாக விமானப்படை நம்புவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது -

விடுதலைப் புலிகள் - இரணைமடுவிலுள்ள விமான ஓடுபாதையுடன் புதிய கோபுரம் ஒன்றை அமைத்துள்ளனர். இது விடுதலைப் புலிகளின் வான் கட்டுப்பாட்டுக் கோபுரமல்ல என விமானப்படை அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் - இது என்ன கோபுரமென்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனினும் இந்தக் கோபுரம் தொடர்பாகக் கண்டறியும் முயற்சியில் விமானப் படையினர் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் புதிய இலத்திரனியல் வான் பாதுகாப்புத்திட்டம் மற்றும் புதிய கோபுரம் அமைக்கப்பட்டுள்ளமையை கடந்த திங்கட்கிழமை விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தை மூதூரிலிருந்து கிளிநொச்சிக்கு ஏற்றிவந்த ஹெலிகொப்டரின் விமான ஓட்டி பிளைட் லெப். தகநாயக்கா அவதானித்துள்ளார்.

இவர் கிளிநொச்சி செல்லும்வேளை இரணைமடுவிற்கு மேலால் பறப்பினை மேற்கொண்டிருந்தபோது விமானஓட்டியின் முன்பக்கமாக சிவப்பு வெளிச்சமொன்று தென்பட்டதுடன் ஹெலிகொப்டரின் விமான எதிர்ப்பு ஏவுகணையிலிருந்து பாதுகாக்கும் சாதனங்கள் செயற்பட ஆரம்பித்தன.

இதுபோலவே கிளிநொச்சியிலிருந்து அவர் திரும்பிச்செல்லும் போதும் இதே செயற்பாட்டை அவதானித்ததுடன் புலிகள் புதிய கோபுரமொன்றை அமைத்துள்ளதையும் கண்டுள்ளார். இதனையடுத்து இவர் கொழும்பு சென்றவுடன் தான் கண்டவிபரங்களை விமானப்படைத் தளத்தில் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இதேவேளை - விடுதலைப் புலிகளின் வான் அச்சுறுத்தலுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு வந்த இந்திய நிபுணர் - தனது முழு அறிக்கையை இலங்கை அரசிடம் கையளிக்கவுள்ளார்.

விடுதலைப் புலிகளின் வான் அச்சுறுத்தலுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைக்கு பயிற்சிகளும் உபகரணங்களும் வெளிநாடுகளிலிருந்து விரைவில் கிடைக்கவுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## கொழும்பு துறைமுகத்துக்கு மூன்று இந்தியக் கப்பல்கள்!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்துக்கு இந்தியக் கடற்படையின் மூன்று கப்பல்கள் கடந்தவாரம் விஜயம் செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்.எல்.என்.எஸ். சயுர என்ற கப்பலின் வகையைச் சேர்ந்த - சுகன்யா மற்றும் கூடலூர், கோழிக்கோட் ஆகிய பெயர்களையுடைய 2 கண்ணிவெடியகற்றும் கப்பல்களுமே கொழும்புத் துறைமுகத்துக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தன.

கடந்த புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொழும்புத் துறை முகத்துக்குள் பிரவேசித்த இந்தக் கப்பல்களில் -

இலங்கை கடற்படையினருக்கு கண்ணிவெடியகற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழ் இளைஞர் ஒருவர் கொழும்பில் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

கொழும்பு - தெஹிவளையில் தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தெஹிவளை இரண்டாவது லேனில் இவர் நடந்து சென்றுகொண்டிருந்தபோதே- இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த நடராஜா சிவானந்தன் என்பவரே கொல்லப்பட்டதாக - அவரிடமிருந்து மீட்கப்பட்ட ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

ஆனால் இவர் மட்டக்களப்பில் கந்தையா இராகுலன் என்ற பெயரிலேயே இருந்துவந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# அரசு விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை அமைக்கவேண்டும்!

## தமிழ்க் காங்கிரஸ் கட்சி தீர்மானம்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேச மக்களுக்கான நிவாரண உதவி மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்காக, விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசாங்கம் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டுமென, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

நேற்றுக்காலை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற இந்தக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :-

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், மூத்த பத்திரிகையாளர் தர்மரட்ணம் சிவராமின் கொடூரக் கொலையைக் கண்டிக்கிறது. இக் கொலை பத்திரிகைச் சுதந்திரத்திற்கு ஒரு சாவு மணியாகும். தமிழ் இனத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். ஒரு சர்வதேச விசாரணைக் குழுவின் விசாரணையின் மூலம்தான் கொலையின் மர்மத்தைக் கண்டுபிடிக்க முடியும்.

சுனாமியால் வடக்கு - கிழக்கிற்கு ஏற்பட்ட பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்வதற்கு, வடக்கு - கிழக்கிலே 60 வீதமான நிலப்பரப்பைத் தம் வசம் வைத்திருக்கும் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கமும் இணைந்து பொதுக் கட்டமைப்பை அமைக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கிலே யுத்தத்தால் குடும்பத் தலைவரை இழந்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. வறியவர்களை இனங்கண்டு மீண்டும் உலர் உணவு நிவாரணத்தை அரசு வழங்கவேண்டும் என அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஆபாசப்படம் பார்த்த இளைஞர்கள் கலாசாரம்பேணும் குழுவிடம் சிக்கினர்!



(தென்மராட்சி)

தென்மராட்சி தென்மேற்குப் பகுதியில் ஆபாசப் படம் பார்த்த இளைஞர்கள் கலாசாரம் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டு [illegible]டும் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்தப் பகுதியில் வீடொன்றில் ஆபாசப் படம் பார்ப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்ற கலாச்சாரம் பேணும் குழுவினர் ஆபாசப் படம் பார்த்த சிலரைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.



இவர்கள் வைத்திருந்த வீடியோ பிரதிகள், சீ.டிக்கள் ஆகியன பறிக்கப்பட்டதுடன், பிடிக்கப்பட்ட இளைஞர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

இவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட வீடியோ பிரதிகள், சீ.டிக்கள் என்பன நேற்று சாவகச்சேரி பஸ்நிலையத்தில் வைத்துப் பொதுமக்கள் முன்னிலையில் தீக்கிரையாக்கப்பட்டன.

## சாரதி அனுமதிப்பத்திரம் இன்று முதல் பரிசீலனை!

(யாழ்ப்பாணம்)

சிற்றூர்திகளில் கடமையாற்றும் சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரம் பரிசீலிக்கப்பட்டு, தகைமைச் சான்றிதழ் வழங்கும் பணி சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் இன்று முதல் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

சிற்றூர்திகளின் சாரதிகள் தமது சாரதி அனுமதிப்பத்திரத்தை பரிசீலனை செய்து, அதற்கான தகைமைச் சான்றிதழ்களைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் தலைமைச் செயலகத்தினால் வழங்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் இல்லாதோர், கடமையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(கிளிநொச்சி)

ஜெயபுரம் வடக்கு பல்லவராயன் கட்டைச் சேர்ந்த கந்தசாமி சற்குணகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (713581119V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பனவும் இவரது மனைவி சற்குணகுமார் செல்வரஞ்சினியின் தேசிய அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சியில் உள்ள 'நமது ஈழநாடு' கிளைப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## சேவைநலன் பாராட்டுவிழா

(பண்ணாகம்)

பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற கனகசபாபதி இரட்ணேஸ்வரனின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு இந்தப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வலிகாமம், வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவன் ஆகியோருடன் சங்கானை, தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து வாழ்த்துரை வழங்கவுள்ளனர். (48)

## மரண அறிவித்தல்கள்

### அன்ரனி தேவகுமார் மேரிஜோசேப்பின் சிந்துஜா (சிந்து, ராசாத்தி)



மாதகலைச் சேர்ந்த அன்ரனி தேவகுமார் மேரி ஜோசேப்பின் சிந்துஜா 08.05.2005 நேற்று அகால மரணமானார்.

அன்னார் அன்ரனி தேவகுமார் (உரிமையாளர் நியூ அகஸ்டின் படகுத் தொழிற்சாலை - பருத்தித்துறை) மேரி மரியநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மாதகலில் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலுப்பிள்ளை கடையடி,*
*மாதகல்.*

தகவல் :
அந்தோனிப்பிள்ளை
(லச்சம்)

(1151)

### குமாரசாமி சாந்தநாயகி (பெரியதோட்டம் - புத்தூர்)

புத்தூரைப் பிறப்பிடமாகவும், பண்டாரிக்குளம் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சாந்தநாயகி அவர்கள் (08.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா குமாரசுவாமியின் அன்பு மனைவியும், குமாரசுவாமி விக்னேஸ்வரன் (சட்டத்தரணி), Dr. கு.மகேசன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தில்லை ஈஸ்வரியின் மாமியாரும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை வேல்நம்பி (புத்தூர்), தாமோதரம்பிள்ளை சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியும், Dr. வி.தில்லைநாதன் (கொழும்பு பெரியாஸ்பத்திரி), மஞ்சுளா சுதர்சன் (கனடா), Dr.ந.அருட்செல்வி (கொழும்பு பெரியாஸ்பத்திரி), Dr. சுதர்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், செந்தூரன், அபிராமி, அஞ்சனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (09.05.2005) திங்கட்கிழமை 21, பண்டாரக்குளம் வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21, பண்டாரக்குளம் வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*நல்லூர்.*
*T.P : 021 222 3377*

தகவல் :
க.குமாரசுவாமி (கணவன்)
கு.விக்னேஸ்வரன் (மகன்)
கு.மகேசன் (மகன்)

(1153)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து விநாயகமூர்த்தி

மீசாலை மேற்கைச் சேர்ந்த சரவணமுத்து விநாயகமூர்த்தி நேற்றுமுன்தினம் (07.05.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

தகவல் :
(இ) வினோதன் (மகன்)

### திருமதி ஜெயசுதா அம்பிகைபாகன்



தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி ஜெயசுதா அம்பிகை பாகன் அவர்கள் 06.05.2005 காலமானார்.

அன்னார் ஜெயராசா பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், அம்பிகைபாகன் (ஆசிரியர் - தியாகராசா ம.வி. காரைநகர்) அவர்களின் அன்பு மனைவியும், மயிலோடை, அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற நாகராசா, திருமதி பரமேஸ்வரி நாகராசா ஆகியோரின் அன்பு மருமகளும், ஜெகதீஸ்வரன் (டென் மார்க்), ஜெயக்குமார் (சுவிஸ்), ஜெயசீலன் (கனடா), ஜெயரஜனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவராணி (டென்மார்க்), தட்சாயினி, அனுஷா (கனடா), மதியாபரணம் (பிரான்ஸ்), சிவபாத சுந்தரம் (பிரான்ஸ்), அம்பிகாபதி, சிங்கராஜா, மதியழகன், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், நிதுஷா, நிபிவிதா, நிகாஷ் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.05.2005) திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதா பவனம்,*
*தாவடி தெற்கு,*
*தாவடி.*

தகவல் :
ஜெயராசா, பரமேஸ்வரி
(பெற்றோர்)
கணவன்,
சகோதரர்கள்.

(1150)

### திருமதி தெய்வானை ஆழ்வாப்பிள்ளை (பாக்கியம்)



துன்னாலை மத்தி கோவிற்கடவையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வானை ஆழ்வாப்பிள்ளை (07.05.2005) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை சீதேவிப்பிள்ளை ஆகியோரின் மகளும், இராமு ஆழ்வாப்பிள்ளை (குமாரசாமி) யின் அன்பு மனைவியும், இராமச்சந்திரன், புஸ்பராணி, புஸ்பலோயினி, புஸ்பரஞ்சினி, புஸ்பறீட்டா, இராமசேது ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்றவர்களான தங்கவேலு, தங்கம்மா மற்றும் நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், லீலாவதி, காலஞ்சென்ற தவரட்ணம், கருணாகரன், விக்னேஸ்வரராஜா, ஆறுமுகதாஸ், அந்தோனி ஆகியோரின் மாமியாரும், நிசாந்தன், நிமலன், சுதாகர், சுதர்சன், சுமணன், மிருதுளா, தீபனா, கபிலன், காலஞ்சென்ற நிரஞ்சன், விபுட்ஷன், நிவஜன், கௌதமன், கௌசிகா, ரம்மியா, சரண்யா, திவ்வியா, ஆரணி, போசினி, மேதினி, மோனிஸ், ரசனிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆதிஸ், அக்ஷை, பரணிஷா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (09.05.2005) திங்கட்கிழமை இன்று காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரோண்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நெடிலி ஒழுங்கை,*
*கோவிற்கடவை,*
*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

தகவல் :
கணவர்
பிள்ளைகள்

(1152)

### பிரதமருடனான சந்திப்பை அடுத்து

# மின்சார சபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் முடிவடைந்தது

அரச தரப்பினருக்கும், இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கப் பிரதி நிதிகளுக்கும் இடையில் - பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து இலங்கை மின்சார சபை ஊழியர்கள் தமது வேலைநிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் இராஜதந்திரமான செயற்பாடுகளால் தமது பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டதாக மின்சாரசபை பொறியியலாளர் சங்கத்தைச் சேர்ந்த றோயல் பிரியந்த தெரிவித்தார்.

இலங்கை மின்சாரசபையை ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய ஆவணத்தை மீளப்பெற பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டதுடன், புதிய சட்டக் கோவையை உருவாக்கவும் முடிவுசெய்யப்பட்டது என றோயல் பிரியந்த மேலும் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் - அரசாங்கத் தரப்பில் மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சின் செயலாளர் பி.டபிள்யு. வீரஹெற்றி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த 3 நாட்களாக உண்ணாவிரதம் இருந்துவந்த தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் நேற்றுக் காலை 8 மணிக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களை நேரில்வந்து சந்திக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த 3 நாட்களாக விடுதலைப்புலி உறுப்பினர்கள் 6 பேர் உட்பட 9 அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களில் 5 பேர் கூரை மேல்ஏறி அமர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவந்தனர்.

நேற்றுமுன்தினமிரவு கொழும்பிலிருந்து மட்டக்களப்புத் திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பா.அரியநேந்திரன், தங்கேஸ்வரி ஆகியோர் நேற்று சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்தனர்.

இவர்களைச் சந்தித்த கைதிகள் தங்களை விடுதலை செய்யக்கோரவில்லை எனவும், பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரியே இந்தப் போராட்டத்தைத் தாங்கள் மேற்கொண்டதாகவும் கூறினர்.

இது தொடர்பாக சட்ட மா அதிபருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்துப் பிணையில் செல்வதற்கான ஏற்பாட்டைத் துரிதப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கைதிகள் கோரிக்கையை முன்வைத்தனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளித்த உறுதிமொழியையடுத்து உண்ணாவிரதத்தைக் கைதிகள் கைவிட்டனர்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீராகாரம் வழங்கி அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தனர். (01)

# களனி பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல்

களனி பல்கலைக்கழகத்தில் இரு மாணவக்குழுக்களுக்கிடையே கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதலில் மூன்று மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்த மோதலில் கடுங்காயங்களுக்கு இலக்கான ஒரு மாணவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சைக்கிள் செயின், பொல்லுகள் சகிதம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் பல்கலைக் கழகத்திற்குள் பிரவேசித்த மாணவர் குழுவொன்று மற்றைய மாணவர் குழுவைத் தாக்கியுள்ளது.

இந்தத் தாக்குதலை நடத்த வந்ததாகக் கூறப்படும் குழுவைச் சேர்ந்த ஒரு மாணவனை கிரிபத்கொடை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். ஏனைய இரு மாணவர்கள் இதன்போது தப்பியோடியுள்ளனர்.

இரு மாணவக் குழுக்களுக்கும் இடையே நீண்டகாலமாக விரோதம் நிலவிவந்துள்ளது. இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் களனி பல்கலைக்கழகத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (தே)

# பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படாவிட்டால் உதவித்தொகை இரண்டாகப் பிரிக்கப்படும்!

## இராஜ தந்திர வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பானது குறித்த காலத்திற்குள் நிறுவப்படாதுவிடின், உதவிவழங்கும் நாடுகளால் வழங்கப்படும் உதவித்தொகை இரண்டாகப் பிரித்து வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்ப அமைக்கப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்புக்கு அரசாங்கம் உரிய காலத்திற்குள் கையெழுத்திடாதுவிடின், இலங்கைக்கு ஒதுக்கப்படும் நிதி - வடக்கு - கிழக்கிற்கு வேறாகவும், தெற்குக்கு வேறாகவும் பிரித்து வழங்கப்படும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உதவி வழங்கும் நாடுகளின் முக்கிய உறுப்பினர்கள் ஏற்கனவே இவ்வாறான நடவடிக்கை சம்பந்தமாக உத்தியோகப்பற்றற்ற முறையில் இணக்கத்தை வெளிப்படுத்தியிருப்பதுடன், கடந்த வாரத்தில், முக்கிய அரசியல் கட்சிகளுக்கும் அதுபற்றி அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

தாங்கள் முன்வைத்த யோசனைக்கு அமைய அரசாங்கம் இந்தப் பொதுக்கட்டமைப்பை நிறுவாது விட்டாலும், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மறந்துவிட முடியாது என்பதால், உதவி வழங்கும் நாடுகளும், அமைப்புக்களும் இந்தத் தீர்மானத்திற்கு வந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக வங்கியினாலும், உதவி வழங்கும் அமைப்புக்களினாலும் சுனாமி அனர்த்தத்தால் இலங்கைக்கு ஏற்பட்ட சேதம் குறித்து மதிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய உதவித்தொகையில் வடக்கு - கிழக்கிற்கு 60 வீதத்தையும், தெற்கிற்கு 40 வீதத்தையும் வழங்க உதவி வழங்கும் நாடுகளும், அமைப்புக்களும் தீர்மானித்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பு நிறுவப்படாதுவிடின் வடக்கு - கிழக்கிற்கான உதவித்தொகையை நேரடியாக விடுதலைப்புலிகளிடம் கையளிப்பதா அல்லது அங்கு இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கையளிப்பதா என்பது குறித்து உதவி வழங்குநர்கள் இதுவரை இறுதித் தீர்மானத்திற்கு வரவில்லை எனக் கூறப்படுகிறது. (தே) (01)

# சிவராம் கொலையைக் கண்டித்து பாரிஸில் கண்டனக் கூட்டம்

கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் படுகொலையைக் கண்டித்து கண்டனக் கூட்டமொன்று பாரிஸில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தமிழர் மனித உரிமை மையத்தினாலும், பிரான்ஸைத் தளமாகக் கொண்டியங்கும் ஊடகங்களினாலும் பாரிஸில் உள்ள கோவில் மண்டபத்தில் இந்தக் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு தமிழர் மனித உரிமை மையத்தின் பிரதிநிதி சக்திவேல் வேல் அழகன் தலைமை தாங்கினார். மௌன அஞ்சலியைத் தொடர்ந்து மறைந்த மாமனிதர் சிவராமின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து தீபச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து கண்டனக் கூட்டம் ஆரம்பமாகியது.

தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் திறலோன் தனதுரையில் -

சிவராம் பத்திரிகைத்துறையில் ஆற்றிய பாரிய சேவையை எடுத்துக் கூறினார். இந்தக் கண்டனக் கூட்டத்திற்கு எல்லைகள் அற்ற பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியாத காரணத்தினால் ஓர் அனுதாபச் செய்தியை அனுப்பியிருந்தனர்.

இந்தக் கண்டனக் கூட்டத்தில் ஈழநாடு பத்திரிகை ஆசிரியரும், நிர்வாகியுமான சிவகுரு பாலச்சந்திரன், தமிழர் தொலைக்காட்சி இணையத்தின் பிரதிநிதி சிறீதரன், ஈழமுரசு பத்திரிகையின் பிரதிநிதி மணி நாகேஷ், பிரான்ஸ் மகளிர் சங்கத் தலைவி திருமதி சுபகுருபரன், தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச் செயலாளர் ச.வி.கிருபாகரன், கவிஞரும் எழுத்தாளருமான அரவிந்தன், கவிஞர் சுபாஷ் அத்துடன் பிரான்ஸ் இடதுசாரி புரட்சிகர கட்சியின் பிரதிநிதி ஜக்கப்பே போன்றோர் மாமனிதர் சிவராமின் படுகொலையை கண்டித்து உரையாற்றினர்.

இக்கண்டனக் கூட்டத்திற்கு மண்டபம் நிறைந்த பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் கூடி மாமனிதர் சிவராமின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

# சிவராம் கொலைசெய்யப்பட்டதற்கு புலிச்சாயம் பூசப்பட்டதே காரணம்!

## சபை விவாதத்தில் ராஜித சேனாரத்ன



(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமைக் கொலைசெய்வதற்காகவே அவருக்குப் புலிச்சாயம் பூசப்பட்டது. எனவே, சிவராமை புலியாகக்காட்ட முயற்சித்தவர்களே இந்தக் கொலைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டுமென ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பாக நாடாளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ராஜித சேனாரத்ன மேலும் கூறியதாவது -

சிவராமைப் புலியாகக் காட்ட முனையும் ஊடகங்கள், சிவராம் முன்னர் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டதை மூடிமறைக்கின்றன. வடக்கிலிருந்து வந்து தமிழர் உரிமைகள் குறித்து யார் பேசினாலும் அவர்களுக்கு புலி முத்திரை குத்துகிறார்கள்.

ஜே.வி.பி சார்பு பத்திரிகை சிவராமை புலியெனக் கூறியது. மகரகமவில் கூட்டமொன்றில் உரையாற்றிய விமல் வீரவன்ச சிவராமைப் புலியெனக் கூறினார். சிவராம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை, அவர்களின் உரிமைகளை தனது எழுத்து மூலம் உலகுக்கு முன்வைத்தார்.

சிவராமைப் புலியாகக் காட்டவே பல ஊடகங்கள் முயற்சிக்கின்றன. கொழும்பில் இடம்பெற்ற தமிழ் சாகித்திய விழாவின்போது, தமிழ்த் தலைவர்கள் விமர்சிக்கப்பட்டனர். இதற்கு ஊடகங்களே பெரும் பங்காற்றின. புலிச்சாயம் பூசப்பட்டு நடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் பலரும் இந்தத் தாக்குதலில் பங்கெடுத்தனர்.

சிவராமுக்கு தமிழ் நண்பர்களைவிட, சிங்கள நண்பர்களே அதிகம். தமிழ்ப் பகுதிகளில் அவர் இருந்ததைவிட, சிங்களப் பகுதியிலேயே அவர் கூடுதலாக இருந்தார். இறுதித் தருணத்தில் கடத்தப்படும்போதுகூட, சிங்கள ஊடக நண்பர்களுடனேயே இருந்தார்.

ஆனால், அந்த நண்பர்கள் சிவராமுக்கு செய்தது என்ன? அவர் கடத்தப்பட்டதைக்கூட, அருகிலிருந்த பம்பலப்பிட்டி பொலிஸுக்கு முறையிடாது தப்பிச் சென்றுவிட்டனர். இப்போது தாம் அப்படிச் செய்ததற்கு அழகான கற்பனைக் கதைகளைக் கூறுகின்றனர்.

எழுதுவதை நிறுத்துங்கள், இல்லையேல் கொல்லப்படுவீர்களென சிவராமுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னரே அவர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

ஜே.வி.பியினரால் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அரசினால் நாட்டின் பிரபல ஊடகவியலாளர்கள் பலர் தாக்கப்பட்டனர், அச்சுறுத்தப்பட்டுள்ளனர். எனவே ஆயுத அரசியல் நிறுத்தப்படவேண்டும்.

ஊடகவியலாளர் சிவராமின் கொலையே இறுதியாக இருக்க வேண்டுமானால், வடக்கு - கிழக்கில் சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்தார். (தே) (01)

# 160 வீடுகளை அமைக்கும் ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கையில் சுனாமி பாதித்த பகுதியில் 160 வீடுகளை அமைத்துத்தர இலங்கை அரசுடன் மாதா அமிர்தானந்த மயீமடம் ஒப்பந்தம் செய்துள்ளது.

மாதா அமிர்தானந்த மயியின் சீடரான சுவாமி ராமகிருஷ்ணானந்தபுரி, இலங்கை அரசின் கூட்டுறவு, இந்துமதம், விவசாய வர்த்தக மேம்பாட்டுத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வீட்டு வசதித்துறை அமைச்சர் பேரியல் அஷ்ரப், நகர வளர்ச்சி மற்றும் நீர் வழங்கல் துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

# அரசியற்துறை அலுவலகம் சோதனை; யுத்தநிறுத்த மீறல் சம்பவமாகும்!

## கண்காணிப்பு குழுவிடம் குயிலின்பன் முறைப்பாடு

(காரைதீவு)

காரைதீவு அரசியற்துறை அலுவலகத்துக்குள் அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் அத்துமீறிப் புகுந்து சோதனை செய்தது போர்நிறுத்த மீறல் சம்பவமாகும் என விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் கடும் விசனம் தெரிவித்தார். அத்துடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் செய்துள்ள முறைப்பாட்டில் -


நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் காரைதீவிலுள்ள எமது அரசியற்துறைச் செயலகத்தை காரைதீவு விசேட அதிரடிப் படையினர் எமது போராளிகள் இல்லாத சமயம் பார்த்து அங்கு திடீர் சோதனையை மேற்கொண்டுள்ளனர். இது ஒரு யுத்தநிறுத்த மீறலாகும். அண்மைக்காலமாக விசேட அதிரடிப்படையினர் எங்களது அனுமதியில்லாமல் எங்கள் மூன்று அலுவலகங்களில் அத்துமீறி சோதனைக்குள்ளாக்கியுள்ளனர். அங்கிருந்த பொருட்களையும் அடித்து நொருக்கியுள்ளனர்.

அண்மைக்காலமாக நிழல் யுத்தத்தை மேற்கொண்டுவருகின்ற படையினர் அதன் மூலமாக விடுதலைப் புலிகளின் அரசியல் பணிகளை முடக்கிவிடலாம் எனக் கங்கணம் கட்டியிருந்தனர்.

அதையும் தாண்டி விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுப்பதைச் சகித்துக் கொள்ள முடியாத படையினர் - அண்மைக் காலமாக எமது அரசியல் செயலகங்களுக்குள் அனுமதியில்லாமல் அத்துமீறி சோதனை மேற்கொண்டுள்ளனர். மூன்று அலுவலகங்கள் சோதனை செய்யப்பட்டும் எந்தவித ஆயுதங்களோ இராணுவத் தொடர்பு பொருட்களோ அங்கு இருக்கவில்லை.

நிராயுதபாணிகளான எங்களது போராளிகள் இம்சிக்கப்படுவதுடன், அவர்களுக்குக் கோபமேற்றி போருக்குரிய சீண்டியிழுப்பு வேலைகளை படையினர் மேற்கொள்கின்றனர். இனிவரும் காலங்களில் இராணுவத்தினரே ஆயுதங்களைப் பதுக்கிவிட்டு விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்ற போலியான பிரசாரத்துக்கு இந்தமாதிரியான நடவடிக்கைகள் வழிகோலும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# தென்னாபிரிக்கா 8 விக்கெட்டுக்களால் மேற்கிந்திய அணியை தோற்கடித்தது!




(கிங்ஸ்டன்)

மேற்கிந்தியத் தீவுகள் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கிங்ஸ்டன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித்தின் சதத்தால் அவ்வணி 8 விக்கெட்டுக்களால் மேற்கிந்தியத் தீவுகளைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதில் ஆரம்ப வீரர்களாக கைல் மற்றும் ஹின்ட்ஸ் ஆகியோர் களமிறங்கினர். எனினும், ஆரம்ப வீரர்களால் நல்லதொரு அடித்தளத்தை இடமுடியவில்லை. இதில் ஹின்ட்ஸ் 5 ஓட்டங்களுடனும், பின்னர் கைல் 26 ஓட்டங்களுடனும், இதனையடுத்து லாரா 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்ததால், மேற்கிந்தியத் தீவுகள் 56 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் சர்வானுடன் இணைந்த சந்தர்போல் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் அவ்வணி மேலும் ஓட்டங்களைக் குவித்தது. இந்தநிலையில், அணி 162 ஓட்டங்களைப் பெற்றநிலையில் சந்தர்போல் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் சர்வானுடன், சிமித் இணைந்தார். இவர்களும் சிறப்பாக ஆடிக்கொண்டிருக்கையில் சர்வான் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் வந்த வீரர்கள் சிறப்பாக தமது ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதில் பிராவோ 14, சிமித் 46, பிராட்ஷோ 4, கொலி



ன்ஸ் 2 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்ததால், அந்த அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 253 ஓட்டங்களைப்



பெற்றது.

பந்துவீச்சில் என்ரினி 4, லாங்வெட், நெல் இருவரும் தலா 2, பொலக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 254 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 45 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் சிமித் சிறப்பாக விளையாடி 102 பந்துகளில் 13 பவுண்டரிகள் அடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் டிப்பென்னர் 56, கலிஸ், கிப்ஸ் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 51, 40 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சிமித், ஹின்ட்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

## கோப்பாய் பிரதேச செயலகமட்ட உதைபந்தாட்ட போட்டியில் ஊரெழு றோயல் சம்பியன்!

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் இந்த வருடச் சம்பியனானது.

நேற்று புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகமும், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மோதின.

இந்த ஆட்டம் தொடங்கி 5ஆவது நிமிடத்தில் றோயல் விளையாட்டுக்கழக வீரர் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நேர்த்தியாகப் பயன்படுத்தி முதல் கோலை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். இதனைத் தொடர்ந்து ஆட்டம் விறுவிறுப்படையத் தொடங்கியது.

இரு அணி வீரர்களும் கோல் போடுவதற்காக பலமுறை முயற்சிகள் எடுத்தபோதும், அவை எதுவும் பலனளிக்காதநிலையில் முதல் பாதி ஆட்டம் 1-0 என்ற கோல் கணக்கில் முடிவடைய, இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதும் இரு அணி முன்னணி வீரர்களும் கோல் போடுவதற்கான பல சந்தர்ப்பம் கிடைத்தபோதிலும், சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்தவில்லை.

ஆட்டம் மேலும் விறுவிறுப்படையத் தொடங்கியது. ஆட்டத்தின் 37ஆவது நிமிடம் றோயல் அணி வீரர் மேலும் ஒரு கோலைப் போட்டு வெற்றியைத் தம்வசம் பலப்படுத்திக் கொண்டார்.

வீனஸ் விளையாட்டுக்கழக வீரர்கள் கோல் போடுவதற்கு பல சந்தர்ப்பம் கிடைத்தும் அதனை அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை.

ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் வீனஸ் விளையாட்டுக்கழக வீரர் ஒரு கோலைப் போட்டதும் ஆட்டம் விறுவி[illegible]படைய, மேலும் கோல் அடிப்பதற்காக மு[illegible]சித்தபோதிலும், றோயல் அணியினரின் பின்வரிசை வீரர்கள் சிறப்பான தடுப்பு நடவடிக்கைகளைக் கையாண்டதனால், றோயல் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

## மதுவரித் திணைக்கள கிரிக்கெட்

# யாழ். வைத்தியசாலை அணி சம்பியனாகத் தெரிவானது!

யாழ்.மாவட்ட திணைக்கள விளையாட்டுக் கழகங்களிடையே வடமாகாண மதுவரி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். செயலக விளையாட்டுக்கழக அணியை 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டு யாழ்.போதனா வைத்தியசாலை அணி இந்த வருட சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

கடந்த சனிக்கிழமை அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.செயலக அணியின் வேண்டுகோளுக்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய போதனா வைத்தியசாலை அணி 20 ஓவர்களில் 73 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் ஜெயக்குமார் 18, மணிவாசகம் 8, பவன் 7, திவாகர் 7 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.செயலக அணியின் சார்பில் ரமணன் 4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஜெயராஜ் 4 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பிரதீபன் 4 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சுதேஸ்குமார், சுயசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.செயலக விளையாட்டுக்கழக அணி 16.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றமையால், யாழ்.போதனா வைத்தியசாலை அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

செயலக அணியின் சார்பில் றோகுலன் 11, பிரசாத் 8, ஜெயராஜ் 6, சுதேஸ்குமார் 5 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் போதனா வைத்தியசாலை அணியின் சார்பில் சத்தியேந்திரா 3.4 ஓவர்கள் பந்துவீசி 8 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், குணாகரன் 4 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், வரதன் 4 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்த இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரருக்கான பரிசு போதனா வைத்தியசாலை வீரர் ஜெயக்குமாருக்கு வழங்கப்பட்டது. (58)

## விளையாட்டு

## ஜெயரட்ணசிங்கம் கிண்ண கிரிக்கெட்

# மானிப்பாய் பரிஷ் கழக அணி அரையிறுதியாட்டத்துக்கு தகுதி!

யாழ்ப்பாணம் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் வி.ரி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கேடயத்துக்கான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட் நொக் அவுட் முறையிலான கிரிக்கெட் போட்டியின் அரையிறுதியாட்டத்துக்கு மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி தகுதி பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில்-கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக்கழக அணியை 63 ஓட்டங்களால் வெற்றிபெற்றதன் மூலமே அரையிறுதியாட்டத்துக்கான தகுதியை மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி 49 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் ஜெயராஜ் 57, ஜசி 55, திலக் 16, சாத்வீகன் 15, பார்த்தீபன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக அணியின் சார்பில் துஷா, சசி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், பிரதீபன், சிற்சபேசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 34 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களை மட்டுமே பெற்றமையால், மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி 63 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

கொக்குவில் மத்திய சனசமூக நி[illegible] அணியின் சார்பாக பிரகாஷ் 23, உமாநாத் [illegible], துஷா 22, சசிகரன் 20, றொபேசன் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.


பந்து வீச்சில் மானிப்பாய் பரிஷ் அணி வீரர் ராஜ்குமார் 5, ஜெயரூபன், கிஷோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், சாத்வீகன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் அரையிறுதிப் போட்டியில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியுடன் மோதவுள்ளது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டி பற்றீசியன் விளையாட்டுக் கழக அணியுடன், சென்றல் விளையாட்டுக் கழகம் எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெறும் போட்டியில் வெற்றிபெறும் அணியும் மோதும்.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இந்த மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. (58)

# ஜேர்மன் ஓபன் ரெனிஸ் தொடர் இறுதிப் போட்டியில் ஹெனின்!



(பேர்லின்)

ஜேர்மன் ஓபன் ரெனிஸ் போட்டியில் சுவிஸ் வீராங்கனையை வீழ்த்தி ஹெனின் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளார்.

ஜேர்மனியிலுள்ள பேர்லின் நகரில் ஜேர்மன் ஓபன் ரெனிஸ் போட்டி நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில், உலகின் முன்னாள் முதல் நிலை வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம்), உலகின் 6ஆவது இடத்திலுள்ள சுவிஸ் வீராங்கனை பட்டிசினிடருடன் மோதினார்.

இவர்களுடைய போட்டி எதிர்பார்த்த அளவுக்கு கடுமையாக இல்லை. ஹெனினின் கை ஆரம்பத்திலிருந்தே ஓங்கி நின்றது. அவர் எளிதாக 6-0, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதன் மூலம் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

இறுதிப் போட்டியில் ஹெனினும், ரஷ்ய வீராங்கனை நாடியா பெட்ரோவும் மோதவுள்ளனர். நாடியா உலகின் 6ஆவது இடத்திலுள்ள வீராங்கனையாவார்.

நேற்று முன்தினம் மற்றொரு அரையிறுதிப் போட்டியில் நாடியா கடும் போராட்டத்துக்குப் பின்பு 6-4, 6-7, 6-3 என்ற செட் கணக்கில் ஜெலினா சன்கோவிக்கை வென்றார்.

இவர்களுடைய போராட்டம் 3 மணி நேரம் நடைபெற்றது.

# இத்தாலி ஓபன் ரெனிஸ்: அகாஷி அதிர்ச்சித் தோல்வி!

(ரோம்)

இத்தாலி நாட்டிலுள்ள ரோம் நகரில் ரோம் மாஸ்டர்ஸ் ரெனிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் அமெரிக்க வீரர் ஆந்த்ரே அகாஷியும், ஆர்ஜென்ரீனாவின் கில்லர்மோ கோரியாவும் மோதினார்கள். இதில் கில்லர்மோ 7-5, 7-6 என்ற நேர் செட் கணக்கில் அகாஷியைத் தோற்கடித்தார்.

இறுதியாட்டத்தில் இன்று கில்லர்மோவும், ஸ்பெயின் வீரர் ராபெல் நாடலும் மோதவுள்ளனர். நாடல் தனது அரையிறுதி ஆட்டத்தில் 4-6, 6-4, 7-5 என்ற செட் கணக்கில் மற்றொரு ஸ்பெயின் வீரர் டேவிட் பெரரை வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.



# கொக்குவில் பிரதமதபாலகத்துக்கு நிரந்தர கட்டடம் அமைக்க முடிவு!

கொக்குவில் பிரதம தபால் நிலையத்துக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கென செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கொக்குவில், கோண்டாவில் பகுதி சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் ஆகியன இணைந்து நடாத்திய கூட்டம் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தின்போது நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக 25பேர் கொண்டகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் மேற்படி தபாலகம் அமைப்பதற்கான ஆலோசனைகள் வழங்குதல், பொருத்தமான இடம்பற்றி ஆராய்தல், அதனால் ஏற்படும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகளை மேற்கொள்ளுதல், நிரந்தர கட்டடத்தினை நிர்மாணித்தல், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது நிறுவனங்கள், அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு கட்டடத்தினை நிர்மாணிப்பதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ள இந்தக்குழு செயற்படவுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்துக்கு அருகில் 1987ம் ஆண்டுவரை இயங்கிவரும் கொக்குவில் பிரதம தபாலகம், 1987ஆம் ஆண்டின் பின்னர் இந்திய இராணுவத்தினரின் இராணுவ நடவடிக்கையின்போது சேதமடைந்தது.

இதன்பின்னர் மேற்படி கட்டடத்தில் தொடர்ந்து இயங்க முடியாது, 18 வருடங்களாகத் தனியார் வீடுகளில், அடிக்கடி இடமாற்றப்பட்டு வருகிறது. (63)

# முனை வெளிச்ச வீட்டை திருத்துமாறு கோரிக்கை

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்திற்குப் பின்பு கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் வெளிச்சவீடு இல்லாமையால் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது இயந்திரப்படகுகளில் ஆழ்கடல், மற்றும் இரவு நேர மீன்பிடிகளில் ஈடுபடும் மீனவர்கள் கரை திரும்புவதற்கு வெளிச்சவீடுகள் அவசியமானவை என்பதால், பருத்தித்துறை முனையில் காணப்படும் வெளிச்சவீட்டை திருத்தி இயங்க வைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக கவனமெடுத்து பருத்தித்துறை வெளிச்சவீட்டை இயங்க வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (14)

# தீவகத்தில் கடற்படையினரின் காவலரண்கள் புனரமைப்பு

(நெடுந்தீவு)

யாழ்ப்பாணம் பண்ணைச் சந்தி தொடக்கம் மண்டைதீவுச் சந்திவரையான பண்ணைப் பாலத்தில் அமைந்துள்ள வீதி வளைவுகளில் தற்போது கடற்படையினர் காவலரண்களைப் புனரமைத்து வருகின்றனர்.

பண்ணைப் பால வீதியானது ஏற்கனவே கரையோரங்கள் சேதமடைந்து வாகனங்கள் விலத்திச் செல்ல முடியாமல் உள்ளதுடன், அப்பகுதிகளில் உள்ள வாகனம் வழிவிடும் வளைவுகளில் காவலரண்களையும், முகாம்களையும் அமைத்துவரும் செயற்பாடு மக்கள் மத்தியிலும், வாகன சாரதிகள் மத்தியிலும் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை ஏற்கனவே, இப்பால வீதியின் இரு மருங்கிலும் வீதி வளைவுகளை உள்ளடக்கியதாக முட்கம்பிவேலிகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு புலம்பெயர் தமிழர்களே உதவிகளை வழங்கினர்

## கூட்டமைப்பு எம்.பி.சிவநேசன்



(கர்கோவளம்)

சுனாமி அனர்த்தத்தால் பாரிய இழப்புகளைச் சந்தித்த தமிழ் மக்களுக்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களே பெருமளவான உதவிகளைச் செய்து வருகின்றனர் என தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் தெரிவித்தார்.

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாழடைந்த கிணறுகளைப் புனரமைப்பதற்காக விடத்தற்பளையைச் சேர்ந்த வி.மார்க்கண்டுவின் நிதியுதவியுடன் கற்கோவளம் புனிதநகர் கிராமத்தில் 33 கிணறுகளைக் கட்டுவதற்குத் தேவையான சீமெந்து பைக்கற்றுக்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனமானது இதுபோன்ற உதவிகளை சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட உடனும் பலமுகாம்களுக்கு செய்திருந்தது. புலம்பெயர் தமிழர்களின் நிதியை பெற்று எமது மக்களின் துயர் போக்க பலவகையிலும் பங்களிப்புச் செய்கிறது. அதன் உதவியுடன்தான் வாழ்வாதாரத்துக்கு முக்கியமான கிணறுகளும் தோண்டித்தரப்படுகின்றது.

அத்துடன், மென்மேலும் இச்சிறிய கிராமம் முன்னேற அவர்களின் பங்களிப்பு மேலும் உங்களுக்குக் கிட்டும் எனத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை செயலக வடமராட்சி இணைப்பாளரான பாலையாவும், வடமராட்சி அரசியற்துறை பொறுப்பாளரான இன்பன், தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவன செயலாளரும், யாழ்.மாவட்ட இணைப்பாள ம் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# உலகவங்கியின் உதவியுடன் வலி.மேற்கில் 70 வீடுகள்

(சுதுமலை)

உலக வங்கியின் ஆயிரம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் 70 வீடுகள் அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மிகவும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட கிராமங்களான மூளாய் பிள்ளையார் கோவிலடி, பல்லசுட்டி, செம்மணத்தி, முங்கோடை, ஊரத்தி ஆகியவை முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

70 வீடுகள் சரியான முறையில் தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்படவேண்டுமென்பதற்காக பிரதேச செயலக அதிகாரிகள் மேற்படி கிராமங்களுக்குச் சென்று மக்களின் நிலை அறிந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (91)

# மலசலகூடம் அமைப்பதற்கு ஐ.ஓ.எம் நிறுவனம் உதவி

(நெடுந்தீவு)

இந்தியாவில் இருந்து நெடுந்தீவுப் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினரால் மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இந்தியாவில் இருந்து மீளக்குடியமர்ந்துள்ள சுமார் 80 குடும்பங்களில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கே மலசலகூடம் அமைத்துக் கொடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஐ.ஓ.எம் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐ.ஓ.எம் நிறுவனத்தினர் இவ்வாறு மீளக்குடியமர்ந்த குடும்பங்களது தொழில்நிலைக்கேற்ப அதற்கான உபகரணங்கள் மற்றும் உதவித் தொகைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

# பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் தட்டுப்பாடு

யாழ்.மாவட்ட செயலக பதிவாளர் அலுவலகத்தில் பிறப்புச் சன்றிதழுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப் படிவங்கள் இன்மையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் கூடிய விலை கொடுத்து அந்தப் படிவத்தினை தனியாரிடம் பெற வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் பெறச் செல்லும் பொதுமக்கள் அலுவலகத்தில் படிவம் இன்மையால் செயலக வாசலில் உள்ள படிவம் நிரப்புநர்களிடம் 5 ரூபா கொடுத்துப் படிவத்தினைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. படிவங்கள் கொழும்பில் இருந்து வராமையே இதற்குக் காரணமெனவும் தெரியவருகின்றது.

இதேவேளை, மக்களின் சிரமங்களை கருத்திற்கொண்டு இப்படிவங்களை பதிவாளர் அலுவலகமே கல்லச்சு செய்து விநியோகிக்கலாம் எனவும் மக்கள் எதிபார்க்கின்றனர். (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சிவன்கோயில் மகா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

முன்னதாக 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 6 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது. (14)

## வெகுஜன போராட்டங்களை முன்னெடுக்க முஸ்தீபு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றக்கோரி வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பது குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி காலை 10 மணிக்கு மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உசன், கரம்பகம், ஒட்டுவெளி, எழுதுமட்டுவாழ் வடக்கு, தெற்கு, விடத்தற்பளை, மிருசுவில் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறுவது பற்றி ஆராயவே மேற்படி கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

## கதிர்காமத்திற்கு பாதயாத்திரை

புளியங்கூடல் சக்களா முருகன் ஆலயத்திலிருந்து தீவக பாதயாத்திரை குழுப் பொறுப்பாளர் த.புலேந்திரன் தலைமையில் இன்று காலை 9 மணிக்கு புறப்படும் பாதயாத்திரை யாழ், கோப்பாய், கைதடி, பரந்தன், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வவுனியா, புல்மோட்டை, திருமலை, மட்டக்களப்பு, பொத்துவில், உகத்தை வழியாக 06.07.2005 புனித கதிர்காம சேத்திரத்தைச் சென்றடையவுள்ளது.

## நாவற்குழி வடக்கில் வேரடி மண் நிகழ்வு

நாவற்குழி வடக்கு வீரபத்திரர் கோவிலடி மாதர் குழுவும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நடத்தும் பாரம்பரிய கலை விளையாட்டு விழாவான வேரடி மண் நிகழ்வானது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் வீரபத்திரர் கோவிலடி முன்றலில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கியூடெக் நிறுவனத்தைச் சேர்ந்த என் பத்மாவதியும், சிறப்பு விருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம், கிராம அலுவலர் எஸ்.நடராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக்கூட்டத்திற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறும், முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது. இதேவேளை இந்த மாநாட்டு மண்டபத்தில் 12 மணிக்கு விவசாயக் குழுக் கூட்டமும் இடம்பெறுமென பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் தெரிவித்தார். (91)

## திருநாள் திருப்பலி

பற்றிமா அன்னை ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி கடந்த 04 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

பத்து தினங்கள் இடம்பெறவுள்ள இந்த திருநாளில் எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை மாலை நற்கருணை எழுந்தேற்றத் திருப்பலி இடம்பெறவுள்ளதுடன், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை திருநாள் திருப்பலியும் கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பெயர் : ற.சோமியா
முகவரி : வல்வெட்டி



சர்வதேச செஞ்சிலுவை தினமான நேற்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையினர் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்த தானம் செய்வதைக் காணலாம்.




"போய் வன் ஐஸ்கிரீம்"
"போய் வ்புரூட் செலட்"
"போய் டூ புரூட் செலட்...வன் ஐஸ்கிரீம்"
"வன் பெக்கட்கோல்ட் லீப்"
"போய் வன் பிளேட் டெவல் பீப்"
"போய் ஐஸ் வோட்டர்"

என்ற இத்தியாதி குரல் ஒலிகளிடையே ஓடியாடி மனித இயந்திரமாக இயங்கிக்கொண்டிருந்தான் பீட்டர். அவன் கால்கள் மெஷின் யுகத்தில் மெஷினைவிட வேகமாக இயங்கிக் கொண்டிருந்தான்; அவன் ஓடியாடி உழைக்கும் இயந்திரம்.

# புரூட் செலட்



"ஸ்டேட்டஸ்" பார்க்கும் பெரிய மனிதர்களிடம் சென்று, அவர்களின் உதட்டிலிருந்து உதிரும் கட்டளைகளைச் செயலில் நிறைவேற்றிக் கொண்டிருந்தான்.

"ஏ 'போய்...வன் புரூட் செலட், டூ பெரிசோனா" என்ற நாகரிகக் குரலோசை மினிகளிடமிருந்தும், "பெல்பொட்டம்" கன்னியர்களிடமிருந்தும் எழும்புமுன்னே அவர்கள் சொல்லைச் செயலாக்க விரைந்தான்.

கோட்டை சதாம் வீதியில் "நேஷனல் ஓட்டல்" எனப் பெயர்ப் பலகையை மாட்டிக்கொண்டு சுதேசிய மது வகைகளை அரசாங்க ஆதரவுடன் விற்பனை செய்யும் ஓட்டலில்தான் இத்தகைய குரல் வருவோர்களிடையே எழுந்தன. அங்கு வருவோர்களிடையே அரசியலிலிருந்து அடுத்த வீட்டுக்காரனின் மனைவியின் காதல் கதை வரை அங்கு அடிபடும். அதைச் "சர்வதேசப் பேச்சு அரங்கு" என்றே குறிப்பிடவேண்டும். அவர்கள் பேசும் பேச்சை சட்டை செய்யாது கிராமபோன் பெட்டி கதறிக்கொண்டிருந்தது. வீதியில் கொடிபிடித்து கோஷம் போடும் அடிவருடித் தொண்டர்வரை அங்கு காணலாம். பண நாயகத்தின் கருணை நேஷனல் ஓட்டலின் கல்லாப் பெட்டியில் வழிந்தோடியது.

நேஷனல் ஓட்டலுக்கு வரும் மனிதர்களிடையே இயந்திரமாக இயங்கிக்கொண்டிருந்தான் பீட்டர்.

## சிறுகதை

பீட்டரை மானேஜர் முதல் சாதாரண வெயிட்டர்வரை அதட்டி மிரட்டி வேலை வாங்குவார்களா? பீட்டருக்கு மானேஜர் என்றால் ஒரே பயம். அவரைக் கண்டால் போதும் கடவுளைக் கண்டவன் மாதிரி பயபக்தியுடன் நடந்து கொள்வான்.

மானேஜரைக் கண்டவுடன் "இயேசுவே" என மனதுக்குள் கடவுளைத் துணைக்கழைத்துக் கொள்வான்.

பீட்டரை யாராவது திட்டினால் கவலைப்படமாட்டான். புகழ்ந்தால் பெருமைப்படமாட்டான். அதிசயப் பிறவி என்று அழைத்தவர்கள் கேலி பேசிக் காதைத் திருகித் தலையில் கொட்டும்போதுகூட தன் சுயமரியாதையைப்பற்றிக் கவலைப்படமாட்டான். "இயேசுவே" என இறைவனைத்தான் துணைக்கழைப்பான்.

பீட்டருக்குத் தாய், தந்தையர் யாருமில்லை. உறவு என்று சொல்வதற்கு ஒரு மனித ஜந்துகூட இல்லை. நேஷனல் ஓட்டலில் நித்தியவாசம் பண்ணும் மேசை நாற்காலிகள், கிளாஸ்கள், ஐஸ் கிரீம், புரூட் செலட் எடுத்துச் செல்லும் கண்ணாடிக் கோப்பைகளுடன்தான் உறவு வைத்திருந்தான். கண்ணாடிக் கோப்பைகளையும், கரண்டிகளையும் கழுவும்போது தனது உறவினர்களுடன் உறவாடுவதுபோன்ற மகிழ்ச்சி ஏற்படும்.

பீட்டருக்கு விவரம் தெரிந்த நாள்முதல் நேஷனல் ஓட்டல்தான் தனது தாய் வீடு; கோயில் எல்லாம். மானேஜர் சாப்பிட்டுவிட்டு மீதி வைக்கும் உணவுகளால் ஒருசாண் வயிற்றை நிரப்பிக்கொள்வான். மானேஜரின் தயவால் ஆடிக்கும் அமாவாசைக்கும் ஒன்றாகக் கிடைக்கும் பேல்மெண்ட் அரைக்கால் சட்டையும் சேர்ட்டும் தான பீட்டர் கண்ட ஆடை அணிகலன்.

பீட்டர் காலை எழுந்து மாலை படுக்கப் போகும்பொழுது முழந்தாளிட்டுச் சிலுவை அடையாளமிட்டு,

"இயேசுவே" என தனக்குத் தெரிந்த விஷயங்களை இறைவனுடன் மௌன பாஷையில் பேசிக்கொள்வான். தனக்குத் தெரிந்த உறவினராக இறைவனிடமே தன் குறைகளைச் சொல்லி ஆறுதல் பெறுவான்.

பீட்டர் எவ்வளவு ஜனத்திரள் வந்தாலும் சிறிதாவது அதிர்ச்சி அடையமாட்டான். ஓடி ஆடி வேலை செய்வான். பீட்டர் ஓடியாடி வேலை செய்வதைக் கண்ட "மனிதாபிமானம்" கொண்டவர்களுக்கு அதைக் கொண்டு வா... இதைக் கொண்டுவா என்று கட்டளை இடுவதில் அலாதி விருப்பம்.

தேசாபிமானம் பேசித் தன் நாட்டு வளத்தை வாரி அள்ளும் உல்லாசப் போகிகள் தரும் ஐந்து சதம், பத்து சதம் சில்லறைக் காசுகளைக் கடை மூடும்போது எவ்வளவு கிடைத்தது என்று எண்ணாமல் மானேஜர் மேசை மீது வைத்துவிடுவான். மானேஜரின் சிகரெட் செலவுக்கு அந்தச் சில்லறைக் காசுகள் துணைபுரியும். பீட்டருக்கு ஒரே ஒரு ஆசை. பலர் விரும்பிச் சுவைத்து உண்ணும் புரூட் செலட்டைச் சுவைபார்க்கவேண்டும் என்ற எண்ணம் வெகுநாட்களாக பீட்டர் பிஞ்சு நெஞ்சில் நிலைத்திருந்தது. ஐஸ்கிரீமைக்கூட அவன் அவ்வளவாக விரும்பவில்லை. தெருவில் தள்ளுவண்டியில் கொண்டுசெல்லும் ஐஸ்கிரீமை சப்ளையர் ஒருவன் பீட்டருக்கு ஒருமுறை வாங்கிக் கொடுத்தான். அன்றிலிருந்து ஐஸ்கிரீம் என்றால் என்ன என்று பீட்டரின் கள்ளமில்லா உள்ளம் உணர்ந்து கொண்டது.

பீட்டருக்குத் தனது ஆசை நிறைவேறாமல் போய்விடுமோ என்ற பயம். எத்தனையோ நாகரிக யுவதிகளின் நான்கு வயதுகூட நிரம்பாத பிஞ்சு மழலைகள்கூட புரூட் செலட்டைச் சுவைத்து உண்ணுகிறதே என்று எண்ணும்போது பீட்டரின் இதய அடித்தளத்திலிருந்து ஒரு விம்மல் கிளம்பிப் பெருமூச்சாய் வெளிப்படும்.

அன்று மாலை ஐந்துமணி நேஷனல் ஓட்டலில் ஜனத்திரள் அலை மோதிக்கொண்டிருந்தது. ஒரு மூலையிலிருந்த கிராமபோன் பெட்டி இந்திப் பாட்டொன்றை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்தது. இந்த நாட்டுச் சங்கீதத்துக்கு மதிப்பில்லை. அந்நியநாட்டுச் சரக்கிற்குத்தான் மதிபபுண்டு என்பதை இந்தி சங்கீதம் சொல்லாமல் சொல்லியது.

"பீட்டர் டூ புரூட் செலட் அறங்வறேங்" என்ற வாடிக்கையான குரலொன்று அதிகாரமிட்டது. அவர் ஒரு தேசியவாதி என்பதை அவருடைய தேசிய உடை எடுத்துக்காட்டியது. அதற்கு ஏற்றாற்போல் அந்தப் பேர்வழி ஆங்கிலத்துடன் சிங்களத்தைக் கலந்து கட்டளையிட்டதே அவர் தீவிர தேசியவாதிதான் என்பதை உறுதிப்படுத்தியது.

மூலையில் கிடந்த மேசை ஒன்றில் ஒருவர் மௌன விக்கிரகமாக இருப்பதைப் பீட்டரின் கண்கள் கவனித்துவிட்டன. அவர் ஏதும் கேட்காமல் இருப்பதைப் பார்த்துவிட்டு அவரருகில் சென்றான். அவர் ஒரு தமிழர் என்பதை அவர் வைத்திருந்த தமிழ்த் தினசரி உறுதிப்படுத்தின.

"தொரே என்ன வேண்டும்"

"என்ன இருக்கிறது" என்று கேட்டுவிடுத் தினசரியைப் புரட்டத் தொடங்கினார். பீட்டர் அங்குள்ளவற்றை ஆசிரியரிடம் பாடம் ஒப்புவிக்கும் மாணவன்போல ஒப்புவித்தான். அவர் மேலும் ஏதும் கேட்காமல் இருப்பதைக் கண்டு பீட்டர் கோபம் கொள்ளாமல் மானேஜரின் மேசையிலிருந்த மெனுவைக் கொண்டுவந்து அவர் முன்னால் வைத்தான்.

அவர் ஒவ்வொன்றாக வரிசைப்படி வாசித்துவிட்டு "ஒரு பிளேட் பேக்கன் பட்டர் பிரைட் சிலைஸ்!" என்று ஓடர் பண்ணினார். பீட்டர் அவற்றைக் கொண்டுவர ஓடினான். அந்தக் கனவான் தான் ஓடர் பண்ணியதை வாசிததார். அவருக்கு சிரிப்புத்தான் வந்தது. அன்று இரவு ஏழுமணிக்கு வானொலியில் "சைவ உணவுகளின் நன்மை" என்ற பொருள் பற்றிப் பேச இருப்பவர் பேக்கனைச் சுவை பார்க்கக் காத்திருந்தார்.

"போய் ஐஸ் வாட்டர்" என்று இறைச்சியை மூக்கு முட்டத் தின்றுவிட்டு ஒருவர் கத்தினார். பீட்டர் ஒவ்வொருத்தரின் வேண்டுகோளை நிறைவேற்ற இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தான்.

"போய் டூ புரூட் செலட்" என்று நாகரீகக் குரலொன்று எழுந்தது. புரூட் செலட் என்ற குரல் பீட்டரின் காதுகளில் தேன்போல் கேட்டது. அவன் உள்ளம் குதூகலத்தில் ஆழ்ந்தது.

அதை ஓடர் பண்ணியது யாரென்று திரும்பிப் பார்த்தான். ஆண்களா, பெண்களா என வித்தியாசம் தெரியாத இரு நாகரிக யுவதிகள். ஒருத்தி சிகரெட்டைப் புகைத்து சுருள் சுருளாக ஊதிக் கொண்டிருந்தாள்.

## அந்தனி ஜீவா

பீட்டர் இரண்டு புரூட் செலட் அடங்கிய கோப்பைகளைத் தட்டில் ஏந்திய வண்ணம் வந்தான். அந்த புரூட் செலட்டைப் பார்க்கும்பொழுது அவன் நாவில் ஜலம் ஊறியது. புரூட் செலட்டில் மிதந்து கொண்டிருந்த முந்திரிகைப் பழமும் அவனைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. தன் ஆசை நிராசையாகிவிடுமோ என்று எண்ணியவாறு "இயேசுவே" எனக் கூறி எச்சிலை மென்று விழுங்கிக் கொண்டான்.

புரூட் செலட்டை நவநாகரிக யுவதிகளின் முன்னால் வைத்துவிட்டு, இன்னுமொருவருக்கு ஐஸ்கிரீம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, புரூட் செலட்டைச் சுவைக்கும் யுவதிகளைப் பார்த்தான்.

பெல்பொட்டம் போட்டிருந்த குதிரைவால் கொண்டைக்காரி புரூட் செலட்டைக் காலிபண்ணிவிட்டு இந்தி சங்கீதத்தை ரசித்தாள். மற்றவளோ புரூட் செலட்டைச் சிறிது சுவைத்துப் பார்த்துவிட்டு ஏதோ பாவம் செய்துவிட்டவள் போல் மணிப்பேர்ஸில் பதித்திருந்த கண்ணாடியில் லிப்ஸ்டிக் பூசியிருந்த தனது உதடுகளைப் பார்த்துத் திருப்தியடைந்தாள். பீட்டர் புரூட் செலட் கோப்பைகளை எடுத்துகொண்டு கண்ணாடிக் கோப்பைகள் கழுவும் இடத்துக்கு வந்தான். காலியாய் இருந்த கோப்பையை எடுத்துவைத்துவிட்டு "இயேசுவே" என்று இருமுறை கூறிவிட்டு, புரூட் செலட் கோப்பையைக் கையில் எடுத்தான். அந்தப் புரூட் செலட்டைக் காலி பண்ணாமல் வைத்த நாகரிக யுவதியை வாயார வாழ்த்தியவாறு...

காலை முதல் இரவு படுக்கப் போகும்வரை இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்த பீட்டர் மனிதனானான். பதினான்கு வயதின் பாலிய உணர்ச்சி உள்ளத்தில் நிரம்பியது. புரூட் செலட்டை நாகரிகமாகக் கரண்டியால் எடுத்து வாய்க்குள் போட்டான். "ஆ... என்ன சுவை... இயேசுவே" என்று தனக்குள் கூறிக்கொண்டான். அது அவனுக்குத் தேவாமிர்தமாக இனித்தது. இனிய சுவை உடலெல்லாம் ஓடியதுபோன்ற உணர்ச்சி. யாரும் பார்ப்பதற்கு முன்னால் புரூட் செலட் கோப்பையைக் காலிசெய்துவிட வேணடும் என்ற எண்ணத்தில் புரூட் செலட்டை வாய்க்குள் போட எடுத்தான்.

"அடேய் திருட்டு ராஸ்கல்" என்றபடி ஓடிவந்தார் மானேஜர். அவரின் கோபாவேசத்தைக் கண்ட பீட்டர் பயந்து நடு நடுங்கிவிட்டான். புரூட் செலட் கோப்பை கீழே விழுந்து நொறுங்கியது. "இயேசுவே" என்று நடுங்கியபடி பலிக்கடாவின் நிலையிலிருந்தான் பீட்டர்.

"டேய் பீட்டர் தினமும் இது தானோ வேலை" என்று கத்தியபடி பீட்டரின் காதைத் திருகி முதுகில் பளீரென்று அறைந்தார். பீட்டர் கத்தவில்லை; கதறவில்லை. "இயேசுவே" என்று முனகியபடி மனித யந்திரமாக மாறிவிட்டான்.

"இனிமேல் இப்படித் திருடித் தின்னா பொலிஸிலே பிடிச்சுக் கொடுத்திடுவேன். திருட்டு நாயே. நன்றிகெட்ட படுவா, போய் ஒழுங்கா வேலையைச் செய்" என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளினார் மனேஜர்.

பீட்டர் ஒவ்வொரு மேசைக்கும் ஓடி ஓடரகளைக் கவனிக்கத் தொடங்கினான்.

மனிதனாக அல்ல...! இயந்திரமாக இயங்கிக்கொண்டிருந்தான்.

(நன்றி - கொழுந்து)

# நூல் அகம்




நூலின் பெயர்:
ஒருமரணமும் சில மனிதர்களும்
எழுதியவர்:
தாட்சாயணி (சிறுகதைத் தொகுப்பு)

ஈழத்து இலக்கிய உலகிற்கு ஞானம் என்ற சஞ்சிகை ஆற்றி வரும் பங்களிப்பு இலக்கியப் பரப்பில் கவனம் கொள்ளத்தக்கதாக அமைகின்ற இந்த நேரத்தில் - இதன் இன்னுமொரு வெளிப்பாடாக வந்திருக்கிறது தாட்சாயணியின் 'ஒரு மரணமும் சில மனிதர்களும்' என்ற சிறுகதைத் தொகுப்பு. முதல் வருடம் சாரங்கா அடுத்த வருடம் தாட்சாயணி இளம் தலைமுறைப் படைப்பாளிகள், அதுவும் பெண்கள் இந்த விதமாய் தம்மை தகுதியோடு அடையாளம் காட்டுவது வரவேற்புக்குரியது. சிறுகதைத் தொகுப்புக்கென ஒரு போட்டி வைத்து, அதில் தேர்ந்து எடுக்கப்பட்ட தொகுப்பு என்ற வகையில் இந்தத் தொகுதியின் கனதி பற்றி ஒரு எதிர்பார்ப்பு இயல்பாகவே எழுகின்றது. அதுவும் சமீப காலங்களில் தனது படைப்புக்களின் மூலம் தன்னை நன்று அடையாளப்படுத்தியவர் தாட்சாயணி. இந்தத் தொகுதியில் 12 கதைகள் இருக்கின்றன.

போர் நடக்கும் பூமியில் வாழ்ந்து கொண்டே போரின் அத்தனை அவலத்துக்கும் முகம் கொடுத்தபடி தான் அனுபவித்த, உணர்ந்த விஷயங்களை இதிலே அவர் பதிவாக்கியிருக்கின்றார். போர் தந்த அவலங்கள். மக்களின் மனதில் அது ஏற்படுத்திய காயங்கள், அந்த பதைபதைப்புக்கள். அப்படியே நம் கண்முன்னால் விரிந்து கொள்கின்றது. அநேகமாய் எல்லாக் கதைகளும் போர் ஏற்படுத்திய மனச்சிதைவு பற்றியே பேசுகின்றன. இவருடைய 12 கதைகளையும் ஒரு சேர வாசிக்கும் போது ஏற்படுகின்ற உணர்வு மனதுக்குள் ஒரு அசைவை ஏற்படுத்துவதை உணர முடிகிறது. ஒரு சிறுகதையின் வெற்றி என்றது அது படித்து முடித்த பின் வாசகன் மனதில் ஏற்படுத்துகின்ற அசைவில்தான் தங்கியிருக்கிறது. தாட்சாயணி இந்தக் கதைகளை எழுதிய போது அவருக்குள் இருந்திருக்கக் கூடிய ஆற்றாமை, ஆவேசம், கவலை, பதைபதைப்பு எல்லாமே படித்து முடிந்தும் எமது மனதுக்குள்ளும் தொற்றிக் கொள்கின்றன.

மழையின் மெல்லிய சாரலை அனுபவிப்பது போன்ற உணர்வு தரும் எழுத்து நடை இவருடையது. அது மிகவும் எளிமையான, சிக்கனமான வார்த்தைகளால் நயமாக கதைகள் முழுவதிலும் பரவிக்கிடக்கிறது.

*கரகரவென்று காற்றினூடு மரக்கிளைகளின் உரோஞ்சல்*
*கண்களூடு கரையப் பார்த்த கண்ணீர்*
*ஊர் போரின் கரங்களால் முற்றிகையிடப்பட்டது*

காற்றில் கை விரித்து வானத்தில் கடவுளை தேடி குமுறி அழுதாள் கிழவி.

என சிலவற்றை குறிப்பிடலாம். கதை செல்லும் உத்தியும், இந்த வார்த்தை நயமும் கதைகளை சலிப்படையாமல் ஆர்வத்தோடு வாசிக்க ஒரு வாசகனுக்கு கை கொடுத்து உதவும் அம்சங்களாய் அமைகிறது.

விடுபடல், பெண், சோதனைகள், என்ற மூன்று சிறுகதைகளும் பெண்ணின் அகநிலை. புறநிலை சார்ந்து எழுதப்பட்ட சிறுகதைகளாக இருக்கின்ற அதேநேரம், போரின் கொடூர வெளிப்பாட்டில் ஏற்படும் மனச்சிதைவு பற்றி ஏனைய கதைகள் பேசுகின்றன. மிக அதிகமாய் சிதைக்கப்பட்ட தென்மராட்சியின் நிலையை மனப்பதைபதைப்போடு துளிர்ப்பு என்ற கதையில் பதிவு செய்திருக்கிறார் தாட்சாயணி. தென்மராட்சியின் சிதைந்த கோலம் வரிக்கு வரி துயரத்துடன் நம் மனதிலும் பதிந்து கொள்கிறது. பூவரசுடனும். ஒரு கடிகாரத்துடனும் ஒரு கிழவியின் வாழ்வு பின்னிக் கிடக்கும் சோகத்தை இன்னொடு கதை சொல்கிறது. ஒரு பூவரசு, ஒரு கடிகாரம். ஒரு கிழவி என்ற இந்த கதையை வாசித்து முடிக்கும் வரை மனதுக்குள் கீறல் கீறலாய் ஒரு சோகம் படிந்து கொண்டே வருவதைத் தடுக்க முடியவில்லை. இதே உணர்வை மழை, தீ, விளிம்பு, ஒரு மரணமும் சில மனிதர்களும் கதைகளும் தருகின்றன. உறவின் மரணத்துக்காக வாய் விட்டு அழ முடியாத சோகத்தையும் கடந்து வந்திருக்கிறோமே என்று ஆற்றாமை அடிநெஞ்சிலிருந்து எழுகிறது.ள

இவை அத்தனையும் இந்த மண்ணிலேதான் நடந்தவை. எமது மனிதர்களுக்குத்தான் நேர்ந்தவை. வெறும் பார்வையாளராக இல்லாமல் ஒருபடைப்பாளியாக நின்று இந்த அனுபவங்களை இலக்கியமாக்கித் தந்திருக்கிறார் தாட்சாயிணி.

ஈழத்து இலக்கியப் பரப்பில் இவரது இந்தச் சிறுகதைத் தொகுதியும் ஒரு காலத்தில் பதிவு என்ற வகையில் தன்னை தகுதியோடு நிலை நிறுத்தும் என்றே சொல்லத் தோன்றுகிறது.

**- தாமரைச்செல்வி**

# இப்போது இனக்காக...

கனவுருகும்
காலைப்பொழுதில்...
அவள் வந்து போவாள்....
நானிருக்கும் தேசம்....
நீண்ட இருளில்
மூழ்கும் போது....
காதல் எப்படி
என்னுள்....
எழுச்சிகொள்ளும்....

எழுதுவதற்கும்
எழும்புவதற்கும்.....
சோம்பறித்தனத்தில்
கண்களை மூடிக்கொண்டு
கட்டிலில்
உடலைத் தளரவிட்டேன்.

ஓசையற்று....
உறங்கிக்கிடந்த
எனது ஊரில்!
அந்நிய
முகங்களைக்கண்டு
அவசரமாய்
நாய்கள் ஊளையிட
ஊரே விழித்தது.
இன்று மட்டுமல்ல!
எங்கள் வாழ்வே
இப்படியாகிவிட்டது.

எலிக்காது போல்!
என்காதுகளும்
மனக்கண்களும்
விழித்தன....

எங்கோ....
எழுந்த அழுகுரலோடு
பின்னால் துப்பாக்கி வேட்டு!
தப்பிக்காமல்
தலையை குறிபார்த்திருக்கலாம்.

அதன் பின்
வாகனம்....
இரைச்சலோடு
புறப்பட்ட வேக ஒலியைத்தவிர
அந்தப் பின்னிரவு
அடங்கிப்போனது.

விடிந்ததும்
முகம் கழுவ
முகத்தோடு பலர்....
நானும் அவர்களில்!
ஒருவன்.
காலை விழிப்போடு
காற்றும் வாங்கும்
காலம்!
காலவரையறையற்று
காணாமல் போய்விட்டது.

யாருபெற்ற பிள்ளையோ
நானறியேன்....
வெட்டிப்பிளந்து
வேடிக்கை பார்ப்பதற்காகவா
போசாக்குணவுண்டு
பத்துமாதம் சுமந்தாய்
உன் மகனை....

இந்த மண்ணை நேசித்த
இந்த முகத்தை உன்மகன்
சுக்குநூறாய்
சுருங்கிப் போவதற்காகவா
சுடு மணலில்.
நார்க்கடகம் சுமந்து
நாளாந்தம்
மீன் விற்றாய்.
புனிதப் படுகையில்
போர்த்துக்கிடந்த
வெள்ளை மனங்கள்
வெளுத்துப்போனது
எப்படி.

வாயிருந்தும்
வார்த்தையிழந்து....
எனது வீதியில்
நடைப்பிணமாய்
நான் அலைந்ததை
உனக்குத் தெரியுமா?

இப்போது
உனக்காக எதைச் செய்வேன்
அழுவதைத்தவிர....

**டானியல் ஜீவா**


# இருண்ட பிரதேசத்தில் வாழ்கிறேன்!

சங்கமிக்கும் வாத்தியங்கள், உற்சாகம ஊட்டுகின்ற போது, மேலும் மேலும கண் விழித்து ஆடுகின்ற ஆட்டத்தில் தான் ஒவ்வொருவருக்குள்ளும் தனிப்பட்டவனாக இருப்பதும் தெரியாமல், கூடி இருப்பதுபோல் தெரிகிறது கூட்டம் கலைய முதல்.

ஆனாலும், பார்வையாளர்கள், புரிந்துகொண்டிருப்பதும், புரிந்து கொள்ளாமல் இருப்பதும், அரங்கில் இருக்கின்ற போது எல்லோரும் ஆடாமல், ஒரு சிலர் ஆடுகின்றபோது குறிப்பிட்ட காலம் வரைதான் தொடர்கிறது.

மாறுபட்ட தாளத்திற்கு ஆட முடியாதபோது தான் ஆடுகின்ற கூட்டத்தற்கும் ஆடமுடியாத கூட்டத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கறது.

ஆடுபவர்களைத் தூண்டிவிட்டு, சமூகத்தினை மாற்றிவிட்டு, சுழலும் சக்கரம்போல ஆடம்பரமான போலி வாழ்க்கையானது ஓடிக்கொண்டிருக்கின்ற போது, அதனுடன் சேர்த்து கட்டிவிட்டு பாதையை மாற்றி விடுகிற துணிவு அடக்கி வைத்திருப்பவர்களால் மட்டும் முடிகிறபோது மீட்பது கஷ்ரமாக



இருக்கிறது. நல்லது செய்ய முற்படின் அவப்பெயர் எழுகிறது.

அடிக்கடி குறூப்பாக அடிதடி. இருண்ட பிரதேசத்தில் நிற்பதாகத் தெரிகிறது. கூட்டம் அதிகமாக இருந்தும் தனிநபருக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஒற்றுமையில்லாத நகரில் நானும் வாழ்கிறேன்.

பிறர் வீட்டின் முகட்டில் வாழும் புறாக்களில் ஒன்று கலைந்து விடின், எல்லாம் கலைந்து விடுகின்ற ஒற்றுமை வாழ வீடில்லாத போதும் இருக்கின்றது.

தூர...தூர சிந்திப்போமானால், எண்ணங்கள் சிறகடித்து எம்மைப் பார்க்கத் தூண்டும் செயற்பாடுகள் எனக்கானதென்று இருக்காமல் எல்லோருக்குமானதென்று பரந்துவிட்டுக் கொடுக்கும் போது மனப்பான்மை பிறந்துவிடும்.

நடு இரவு அமைதியில் வீழ்ந்து கொண்டிருக்கிறபோது கைத்தாங்கலாகக் கைக்குப் பட்டுவிட்டதைப் பிடித்து ஆரம்பிக்கின்ற அந்த முதல் கனவு நிஜப்படுமா?

அடிவாங்குவது எல்லோருக்கும் தரக்குறைவானது தான். சந்திக்கு சந்த கூட்டம் கூடி சண்டித்தனம் செய்ய மோட்டார் சைக்கிளில் கொட்டன் வாள்-கத்தி கொண்டு அணிவகுத்து வரும்போது அழகாகத்தான் இருக்கிறது. நாங்கள் வீரமானவர்கள் தான் பெருமையாகவும் இருக்கிறது.



சுற்றிவர ஆயுத முனையில் இராணுவீரர்கள் எங்களை ஒன்றுமே செய்யாமல் வேடிக்கைப் பார்த்து நிற்பதும் அழகாகத்தான் இருக்கிறது.

இழந்த தமிழ் மண்ணை மீட்பார்களா என்ற கேள்வி எழும்போது கோழையாகின்ற நிலை அசிங்கமாகவும் இருக்கிறது.

கட்டி வைத்து அடித்ததும், தூக்கிச் சென்று சுட்டு கடலில் வீசியதும், தரையில் புதைத்ததும் ஞாபகம் இருக்கிறதா?

எங்கே என்று தேடிய போது காணாமல் போனோர் பட்டியலில் சேர்ந்ததும், விடுதலைப் புலி என முத்திரை குத்தி, சிறையில் அடைத்ததும், ஓரிரு வருடங்களுக்கு முன்பே தான் நடந்தது ஞாபகம் இருக்கிறதா?

எல்லாவற்றையும் மறந்து நூற்றாண்டிலும் அடிமையாக வாழப் பிறந்தவர்கள், போராடி வீரமரணமடைந்தவர்களுக்கும் அவப்பேரை உண்டாக்கி இருக்கிறோம். அண்ணன்மாரை நினையுங்கள் எங்களுக்கான பாதையை காட்டி விட்டுச் சென்றுள்ளார்கள்.

படிக்கின்ற வயதில் சீக்கிரெட்டினை பிடித்துக்கொண்டும், சாராயத்தினை குடித்துக்கொண்டும், என்ன சாதிக்கப் போவது. கண் இருந்தும் குருடாகியும், காதிருந்து செவிடாகியும் உலாவுகின்றோம்.

பாய் மரக்கப்பலில் துடுப்பினை வலிக்கின்ற போதுதான் போகும் திசை நோக்கி பயணிக்கின்றது. எதுவும் உந்து சக்தியாக இருக்கிற போதுதான் செயல்படுகிறது.

கைவிட்டு, நம்பிக்கையில்லாத எந்த விடயங்களுக்கும் மறுபக்கம் ஒன்று இருக்கிறதென உன்னிப்பாக கவனிக்கிறபோது எந்த செயல்பாடுகளும் தெரிவு செய்யப்படுகின்றது.

இதனால் எதிர்பார்புகள் நல்லவையாகும் போது கற்பனை வடிவமான, அலங்கார உருவமான முகமூடி பொம்மையில் தான் இருக்கிறது, மனிதனில் அல்ல.

என்னை நானே பார்த்துச் சிரிக்கவும், என்னை நானே பார்த்து அழுகின்ற வினாடிகள் நிறைவுபெறும் முன்னர் தெரிவதில்லை.

முகம் பார்க்கின்ற கண்ணாடிக்கு பல முகம். முகத்தோடு நிற்கின்றபோது என்னை தெரிகின்ற போது தான் சரி செய்கிறேன். அதேபோல் சரியாக இருக்கிற எதனையும் பின்பற்றுகின்ற போது எங்களுக்குள்ளே இருக்கும் மிருகம் தூங்கி விடுகிறது.

விடுவிக்கப்பட்டபோது, ஒருவரை மாற்றிக்கொள்ளும் நிகழ்வு நடத்தப்படுகின்ற அன்றிலிருந்து ஒரு மாற்றம். தன்னை முழுமையாக நிறுத்திக்கொள்கின்றது. அந்த முகம் மறையும் போது இனங் காட்டப்படாதவாறு பட்டும் படாமலும் வந்து போகின்ற நாலுபக்கச் சந்தியில் ஒருவராக எமது ஊரில் பட்டுணர்ந்து தான் வரமுடிகிறது.

**செல்வா**

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# பனை தென்னைவள தொழில் வல்லுனர்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் நிதியுதவி வழங்கல்!

(முல்லைத்தீவு)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பனை, தென்னை தொழில் வல்லுனர்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் தொழில் உபகரணங்களை வழங்குவதற்கான நிதி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் அனுசரணையுடன் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு, முல்லைத்தீவு வடக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மன்மதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை முல்லைத்தீவு பிரதேச கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேங்கைத் தமிழன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். கூட்டுறவுக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க இணை பொது முகாமையாளர் சி.வேதவனம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மங்கள விளக்கை முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் மூர்த்தி, ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ரவிக்குமார், யோசெப் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை வலைஞர்மடம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் கலைச்சந்திரன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க இணையப் பொது முகாமையாளர் சி.வேதவனம், முல்லைத்தீவுப் பிரதேச கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேங்கைத் தமிழன், முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை ஒக்ஸ்பாம் நிறுவன உதவி நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் ரவிக்குமார், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து 60 அங்கத்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் கடனுதவி வழங்கப்பட்டது. இதனை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் வழங்கி வைத்தார். (வெ)





# பாடசாலைகளுக்கிடையில் உடற்பயிற்சிப் போட்டி!

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தைக் கொக்கிளாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும், இரண்டாம் இடத்தை புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணியும், மூன்றாம் இடத்தை பாலிநகர் மகாவித்தியாலய அணியும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தைக் கொக்கிளாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும், இரண்டாம் இடத்தை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அணியும், மூன்றாம் இடத்தை முத்து ஐயன்கட்டு இடது கரை பாடசாலை அணியும் பெற்றுக் கொண்டன. (வெ)






நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தமிழீழ வரலாற்றுத் தேர்வில் சித்தியெய்திய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில், தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் சிறப்புரையாற்றுவதையும், சித்தியெய்திய மாணவர்களுக்கான பரிசை தமிழீழத் தேர்வு ஆணையாளர் க.சரவணபவன் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்களையும் படங்களில் காணலாம். (படம்: சு.பாஸ்கரன்)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**மே-09**

1776:- ஜெனிவாவைச் சேர்ந்த ஜே.எம்.பொஸ்வெயிட் என்பவர் வடிவமைத்த நிறுத்தல் கடிகாரம் ஆய்வுக்காக வழங்கப்பட்டது.

1893:- முதன்முதலாக மணிக்கு 160 கி.மீ வேகத்தில் எம்பயர் ஸ்டேட் எக்ஸ்பிரஸ் எனும் புகையிரதம் சைராக்யூஸ் பஃபல்லோ புகையிரதப் பாதையில் ஓடியது.

1901:- அவுஸ்ரேலியாவின் முதலாவது நாடாளுமன்றம் மெல்பேர்ன் நகரில் கூடியது.

1916:- மத்திய கிழக்கில் பிரிட்டிஷ், பிரான்ஸ் நாடுகளுக்குச் சொந்தமான பகுதி களை வைக்ஸ் பிக்காட் உடன்படிக்கை வரையறுத்தது.

1917:- பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இதுவரையிலும் இல்லாத அளவுக்கு 50 கோடி பவுண்களைப் போர்ச்செலவுக்காக ஒதுக்கியது.

1918:- ரஷ்யாவில் உணவுத்துறை சர்வாதிகாரச் சட்டத்தை வெளிக்கொண்டு வந்ததன்மூலம் கம்யூனிஸ்ட் நிர்வாகக்குழு விளைபொருட்கள் மீது தன்னாதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

1918:- பிரிட்டன் - ரஷ்யாவின் உபதூதராகக் கடமையாற்றிய ஜோன் மக்ளீனுக்கு ஐந்துவருட கடுங்காவல் தண்டனையை விதித்தது.

1927:- அவுஸ்ரேலியாவில் தலைநகர் மாற்றத்தின் முதற்கட்டமாக கன்பராவில் நாடாளுமன்றக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது

1941:- நேசப் படைகள் ஜேர்மனியின் ஒரு நீர்மூழ்கிக் கப்பலைக் கைப்பற்றின. இக் கப்பலில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் நேச நாடுகளது வெற்றிக்குப் பேருதவியாக அமைந்தன.

1945:- ஐரோப்பிய வெற்றி நாளை ரஷ்யா கொண்டாடியது.

1962:- மாஸ சூஸட் இன்ஸ்டிடூயுட் ஓவ் ரெக்னோலஜி என்ற நிறுவன வளாகத்தில் உள்ள தொலைநோக்கியுடன் இணைக்கப்பட்டிருந்த கருவி மூலம் லேசர் ஒளிக்கீற்றுகள் நிலாவில் 6 கி.மீற்றர் குறுக்களவுடைய பரப்பில் செலுத்தப்பட்டு அங்கிருந்து எதிரொலிக்கப்பட்டது.

1965:- லூன் - 5 என்ற விண்கலம் ஏவப்பட்டது. இது நிலவில் இறங்க முயற்சிக்கும்போது இயந்திரப் பழுது காரணமாக நிலாவில் மோதி நொருங்கியது.

1978:- மார்ச் மாதம் 16 ஆம் திகதி தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்ட இத்தாலியின் முன்னாள் பிரதமர் அல்டோமோரோவின் உடல் ஒரு காரில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

1985:- வல்வெட்டித்துறை நூல் நிலையத்தில் இலங்கை இராணுவத்தினர் நடத்திய படுகொலை வெறியாட்டத்தில் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகினர்.

1988:- மார்ச் மாதம் 3 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட பல்சார் என்னும் துடிக்கும் விண்மீனை ஒரு துணை விண்மீன் சுற்றிவருவதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

தொகுப்பு - சந்துரு

# முல்லைத்தீவு மாவட்ட கிளையில் உலக செஞ்சிலுவைச்சங்க தினம்

(புதுக்குடியிருப்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவு கிளையின் ஏற்பாட்டில் உலக செஞ்சிலுவைச் சங்க தினம் கடந்த வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் பி.கே.சிவலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு குமுழமுனை பிரதேசத்தில் நண்பகல் 2 மணிக்கு குமுழமுனை மகா வித்தியாலயத்தின் உப அதிபர் சு. உதயசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் எயிட்ஸ் நோய் சம்பந்தமான கருத்துரையை இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு மாவட்ட உப தலைவர் ஏ.கே.மகாலிங்கம் நிகழ்த்தினார். செஞ்சிலுவைச் சங்கத்தின் கோட்பாடுகள், செயற்பாடுகள் தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரிவு தலைவர் ப.பரமலிங்கம், பரப்புரை உத்தியோகத்தர் தி.ஜனார்த்தனன் ஆகியோர் நிகழ்த்தினர். முதலுதவி சம்பந்தமான கருத்துரைகளை முத லுதவி இணைப்பாளர் சு.ஸ்ரீரங்கன் நிகழ்த்தினார். (வெ)

## கிரிக்கெட் முக்கியஸ்தர்கள் கிளிநொச்சி வருகை

(கிளிநொச்சி)

இலங்கை கிரிக்கெட் அணியின் முக்கியஸ்தர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளனர். இவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைச் சந்திப்பதற்காகவே வருகைதரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் அணியின் உப தலைவர் மகேல ஜயவர்த்தன மற்றும் விக்கெட் காப்பாளர் குமார் சங்ககார, ரசல் ஆர்னல்ட், வேகப்பந்து வீச்சாளர் ருசித பெரேரா ஆகியோரே வருகைதரவுள்ளனர்.

சுனாமி கடல் அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த 250 சிறுவர்களுக்கு மாதாந்தம் உதவித் தொகையாக 1000 ரூபாவை வழங்குவது தொடர்பான நிகழ்வில் இவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## ஆளுநர் விருதுக்கான போட்டியில் மாணவர்கள் பங்குபற்றமுடியாத நிலை

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் ஆளுனர் விருதுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எட்டு மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்றபோது முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. இதனால் பாடசாலை அதிபர்கள், விளையாட்டுத்துறை ஆசிரியர்கள், வலயக் கல்வித் திணைக்களத்துக்குச் சென்று இது தொடர்பாகத் தெரிவித்தபோது எதுவித பதிலும் அதிகாரிகள் அளிக்கவில்லை.

இந்தத் துறையில் மாணவர்களை வளர்த்தெடுப்பதற்கு அடிப்படை வசதிகளை சிலபாடசாலைகளுக்காவது ஏற்படுத்திக்கொள்ள வழிசெய்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர். (வெ)

# மலேசிய சம்மேளனத்தினரால் பெண்களுக்கு துவிச்சக்கரவண்டி

மலேசிய சம்மேளனத்தினரின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஒருங்கிணைப்பின்கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட 80 பெண்களுக்கு தையல் இயந்திரங்களும், சமூக வலுவூட்டலாளர்கள் 80 பேருக்கு துவிச்சக்கரவண்டிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்த நிகழ்வு வடக்கு - கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ஞானம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கருத்துரைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் திலகர், மலேசிய இலங்கையர் நிறுவனத்தின் தலைவர் குலசேகரம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் மலேசிய இலங்கையர் நிறுவனங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளான எஸ்.குலசேகரம், மகாலிங்கம், சரத் ஜெயதிலக, ஞானசேகர, பேராசிரியர் திலகவதி செல்லையா, பேராசிரியர் ராஜேஸ்வரன், தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகள் பயனாளிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது*
*தூக்கம் கடிந்து செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இந்தியாவின் இன்றைய நகர்வுகளும் ஈழத் தமிழ் மக்களின் அச்சங்களும்!

கடந்த சில வாரங்களாக இலங்கை விவகாரம் தொடர்பாகவும், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும், இந்தியத் தரப்பிலிருந்து வெளியிடப்பட்டுவரும் கருத்துக்களும், அறிக்கைகளும் மட்டுமல்ல மேற்கொள்ளப்பட்டு வரும் சில மறைமுகமான நகர்வுகளும்கூட தமிழ்மக்களுக்கு இந்தியா மீதான மதிப்பையும், கௌரவத்தையும் மட்டுமல்ல அதன் மீதான நம்பிக்கைகளையும் வெகுவாகக் குறைப்பதாகவே அமைந்து வருகின்றன.

ஏற்கனவே சில வாரங்களுக்கு முன்னர் தேசவிரோதிகள் என தமிழ் மக்களால் தெளிவாக இனங்காணப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள தமிழ் ஆயுதக் குழுக்களை ஆனந்த சங்கரியின் தலைமையில் ஒருங்குசேர்த்து அக்குழுவுடன் கருணா கும்பலையும் இணைத்து - ஒரு தமிழர் விரோதக் கூட்டணியை அமைத்துள்ளதாக வெளிவந்த ஊடகச் செய்திகளால் அதிருப்தி அடைந்திருந்த தமிழ்மக்கள், ஈழத் தமிழர்களுக்கு விரோதமாக எந்தவொரு ஒப்பந்தத்தையும், நடவடிக்கையையும் இந்தியா எடுக்காது என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபாலசாமி அவர்களுக்கு கொடுத்த உறுதிமொழி காரணமாக ஓரளவு ஆறுதலடைந்திருந்தனர்.

ஆனால், அது வெறும் தேர்தல்கால வாக்குறுதி போன்ற ஒரு அறிவிப்புத்தான் என்பதையடுத்து வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள் நிரூபிப்பதாக இருக்கின்றன.

பலாலி விமானப்படைத்தள விமான ஓடுபாதை சீரமைப்பு நடவடிக்கை, இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம், இலங்கை கடற்படைக்கான கடற்கலங்கள் மற்றும் போர்க் கலங்கள் விநியோகம், இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் இலங்கைக் கடற்படையுடன் இணைந்து கூட்டு ரோந்து நடவடிக்கை... எனத் தொடர்ந்து வரும் அறிவிப்புகளும், அவை குறித்து இந்திய இலங்கை உயர் அதிகாரிகளின் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல்களுக்கும் இருதரப்பிலிருந்தும் பல்வேறு காரணங்களும், நியாயப்படுத்தல்களும் கூறப்பட்டாலும் இவை பல வகைகளிலும் ஈழத் தமிழ்மக்களுக்கும், அவர்களின் நியாயபூர்வமான விடுதலைப் போராட்டத்துக்கும் மறைமுக எச்சரிக்கையையும், சவாலையும், அச்சுறுத்தலையும் விடுப்பதாகவே உள்ளன என்பதை தமிழர் தரப்பு மிகத் தெளிவாகவே உணர்ந்துள்ளது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விவகாரத்தில் அது குறித்து தமக்கு எதுவுமே தெரியாதென இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சின் செயலர் ஷியாம் சரண் அறிவித்தபோதோ, இந்தியாவுக்கு அந்த கட்டமைப்பு ஏற்படுவது குறித்து திருப்தியில்லை என்பது தெளிவாயிற்று.

பொதுக்கட்டமைப்புக் குறித்து இந்தியா மிகத் தெளிவாகவே அறிந்துள்ளதென்பது உண்மையே.... ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்ற அமைப்புகளும் ஆனந்தசங்கரி போன்ற பேர்வழிகளும் இது குறித்து இந்தியாவுக்கு தொடர்ந்து பூச்சாண்டி காட்டி அதனைத் தடுத்து நிறுத்துமாறு அறிக்கைகளை விடுத்துவந்தது பகிரங்கமான விடயமேயாகும்.

அவர்களின் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பொய்யானதும், அபத்தமானதுமான கருத்துக்களை நம்பி நின்றுகொண்டே இது தொடர்பான விவகாரத்தை இந்தியா அணுக முயல்கிறது என்பதும் தெளிவான ஒன்றேயாகும்.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு தமிழர் நலன்களை புறந்தள்ளிய இந்திய மற்றும் சமாதான விரோத பேரினவாத சக்திகளின் செயற்பாடுகளுக்கு பின்புலமாகவே அமைந்துள்ளதெனலாம்.

இது ஒரு புறமிருக்க விடுதலைப்புலிகளின் வான்படை மற்றும் கடற்படை குறித்த செய்திகளில் இந்திய பார்வை இப்போது விழுந்துள்ளதுபோல் தெரிகிறது. விடுதலைப் புலிகள் விமான ஓடுதளமொன்றை அமைத்திருப்பதாக வெளியான செய்திகள் குறித்து கவலை தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங்-பலாலி விமான நிலைய ஓடு பாதையை இலங்கை விமானப்படைக்கு திருத்தி நவீனப் படுத்திக் கொடுக்க இந்தியா முன்வந்துள்ள செய்தி தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ள அச்சத்தையும், கவலையும் பற்றி கவனத்தில் கொண்டதாக இல்லையே...!


விடுதலைப்புலிகளின் கடற்படை என்பது ஒரு வரலாற்று அவசியம் என்பதை இந்தியத் தரப்பினர் புரிந்து கொள்வது அவசியமாகும். இப்படைப்பிரிவு இந்தியாவுக்கு எதிரானது என நினைப்பது தவறு. கோமாளித்தனமானது. ஈழத் தமிழர்களை இலங்கைக் கடற்படையினரின் "வரலாற்றுப்புகழ்மிக்க" அழிப்பு நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்க அதிதேவை - அவசியம். அழிவு செய்யும் இலங்கைக் கடற்படையினரின் அராஜகம் குறித்து இந்தியாவுக்கு நன்கு தெரியும் அதனால் கொல்லப்பட்ட இந்திய - தமிழக - மீனவர்களது பட்டியலின் நீளம் நட்வர் சிங் அறியாதது அல்ல.

இத்தகைய மோசமான - ஆபத்தான கடற்படைக்கு பரிசுகளையும், போர்க்கப்பல்களையும், ஆலோசனைகளையும் இந்தியா தொடர்ந்து வழங்கிவருவது தமிழரையும் அழிப்பதற்கே உதவும் என்பதை தமிழர்கள் கவலையோடு உணர்ந்தே உள்ளனர்.

இந்த யதார்த்தத்தில் வைத்துப்பார்த்தால் இந்திய வெளியுறவு அமைச்சரின் கவலை அர்த்தமற்றதும் வேறு அரசியல் இராஜதந்திர உள்நோக்கங்களைக் கொண்டதுமாகும் என்பதே உண்மையாகும்.

இந்தியாவின் சுயநல அபிலாஷைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அது மேற்கொள்ளும் மேற்குறித்த நகர்வுகளும், விடுக்கும் அறிக்கைகளும் ஈழத்தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலாகவும், கவலையளிப்பதாகவும் இருக்கிறதென்பதே உண்மையாகும்.

# நாடும் நடப்பும்




செய்தி:-
போர் நிறுத்தம் நெருக்கடி நிலைக்குள், அரசின் செயற்பாடுகளில் நம்பிக்கையிழப்பு - சு.ப.தமிழ்ச்செல்வன்

### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

## ஈழத்தமிழர்களின் அவலம் சிலருக்கு சித்து விளையாட்டாகிவிட்டது!

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் காணப்படுகின்ற விமானங்கள் குறித்து இந்தியா கவனம் செலுத்திவருவதாகவும் இரணைமடுவிலுள்ள அவர்களது விமான ஓடுபாதை குறித்து அக்கறையாக இருப்பதாகவ இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் தெரிவித்திருக்கிறார் என்று பத்திரிகைச் செய்தியைப் படித்தார் பரமசிவம்.

பின்பு இலங்கைக்கு எந்தவிதமான உதவியையும் செய்வதற்குப் பாகிஸ்தான் தயாராக இருக்கிறது என்று கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் சமீபத்தில் தெரிவித்திருந்தது பற்றியும் இந்தியா கவனம் செலுத்துமென்பது பற்றி நட்வர்சிங் எதுவும் சொல்லவில்லையானாலும் அது இதுபற்றிக் கவனம் செலுத்தாமலிருக்க முடியாது என்று நண்பர் பரமசிவம் சொன்னார்.

அது சரி யாழ்ப்பாணத்தின் மீது இலங்கைப் போர் விமானங்கள் ஆலயங்கள், தேவாலயங்கள், கல்வி நிலையங்கள் அகதி முகாம்கள் என்று எந்த வேறுபாடுமில்லாமல் குண்டு வீசித் தாக்கின. சாவகச்சேரி என்ற ஊரே விமானக்குண்டுவீச்சினால் அழிக்கப்பட்டது. யாழ்ப்பாண நகரில் குண்டுவீச்சில் அழிந்த பகுதிகள் இன்னமும் காட்சிப் பொருள்களாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் குண்டுவீச்சில் மாண்டவர்கள் எத்தனைபேர், அழிந்த கட்டடங்கள் எத்தனை? இவை பற்றியெல்லாம் இந்தியா அந்த நேரம் கொஞ்சமேனும் கவனத்தில் எடுத்ததா, மாண்டவர்கள் பற்றி அக்கறை செலுத்தியதா? என்று கேட்டேன்.

அதுதான் அந்த நேரங்களில் வெளியுறவு அமைச்சராக இருந்த ஐ.கே.குஜ்ரால் இந்தியாவின் கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்திருந்தாரே போதாதா? என்றார் பரமசிவம்.

இதன்பின்னர்தானே இந்தியா மனிதாபிமான உதவியாக இல்ங்கைக்கு கோடிக் கணக்கில் பணமும் கொடுத்து பீரங்கி பொருத்தப்பட்ட கடலோரப் பாதுகாப்புக் கப்பலையும் கொடுத்தது என்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கடற்படை இருக்கிறது. இது உலகிலேயே நான்காவது கடற்படை. இதனால் இந்தியாவுக்கே ஆபத்து என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர்தானே இந்தியாவுக்கு எச்சரிக்கை செய்தார் என்றார் பரமசிவம்.

இதனால்தான் இந்தியாவுடன் இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளவேண்டிய அவசியத்தை கதிர்காமர் இந்தியாவுக்கு எடுத்துச் சொல்லி ஒப்பந்தத்தை உருவாக்கினார். இந்த ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகவேண்டுமென்பதற்காகத்தானே இப்பொழுது விடுதலைப் புலிகளிடம் நீர்மூழ்கிக் கப்பல் இருப்பது பற்றிய கதையும் வெளிவந்திருக்கிறது. பாகிஸ்தானிடம் சீனாவிடம் இருக்கும் கடற்படைகளைப் பற்றியோ, விமானப்படைகளைப் பற்றியோ கூட இந்தியா அக்கறை செலுத்தவில்லை. விடுதலைப் புலிகளிடமுள்ள கடற்படையைப் பற்றியும், விமானங்கள் பற்றியும் இந்தியா எவ்வளவு அக்கறை செலுத்துகிறது பார்த்தீரா என்றேன்.

விடுதலைப் புலிகளிடம் கடற்படை இருக்கிறது. அதில் நீர்மூழ்கிக் கப்பலும் இருக்கிறது. விடுதலைப் புலிகளிடம் இரண்டு விமானங்களிருக்கின்றன. மேலும் விமானங்கள் வாங்குவதற்கு புலிகள் முயற்சி செய்துவருகின்றனர். இரணைமடுக் குளப்பகுதியில் விமான ஓடுபாதையும் இருக்கிறது. இவையெல்லாம் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னர் நிகழ்ந்திருக்கின்றன. இது பற்றி இந்தியா இப்பொழுது அக்கறையுடன் கவனித்துவருகிறது என்றார் பரமசிவம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வுகாண்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, இந்தியாவை நடுநிலையாளர்களாக, அனுசரணையாளர்களாக உதவிக்கு வருமாறு கேட்கப்பட்டபோது, இந்தியா மறுத்துவிட்டது. இதில் எந்தவிதமாகவும் சம்பந்தப்படப்போவதில்லையென்று இந்தியா தெரிவித்தது. பின்னர் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறும்போது அதில் விடுதலைப் புலிகள் சார்பில் கலந்துகொள்ளும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோய்வாய்ப் பட்டிருப்பதால், தலைவருடன் கலந்தாலோசனை செய்வதற்கு வசதியாக தென்னிந்தியாவில் சில தினங்கள் தங்குவதற்கு அனுமதி கோரப்பட்டது. இதற்கும் இந்தியா மறுத்துவிட்டது. இதனைத் தொடர்ந்து அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் கடலிலும், தரையிலும் பயணிக்கத்தக்க சீ-பிளேனில்தான் இரணைமடுக்குளத்தில் வந்திறங்கினர். இந்தக் குளத்தில் திடீரென சீ-பிளேன் வந்திறங்கியிருக்கமுடியுமா? விமானிகளும், விமானப்படையினரும் பார்த்து ஆலோசித்துத்தானே அங்கு விமானம் வந்திறங்கியிருக்கமுடியும். அப்போதே விடுதலைப் புலிகளிடம் விமானிகளும் விமானப்படைகள் பற்றித் தெரிந்த தொழில்நுட்பவியலாளர்களும் இருந்திருக்கத்தானே வேண்டும் என்றேன்.

இவையெல்லாம்தான் இப்பொழுது இலங்கைக்குப் பீதி ஏற்படுத்தி எப்படியாவது இந்தியாவுக்கும் பீதியை ஏற்படுத்தி பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து இந்தியாவை மீண்டும் இலங்கைப் பிரச்சினைக்குள் சிக்கவைத்து இலங்கை தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் பாடாய்ப்படுகிறது. இந்தியாவும் இன்னமும் பாதுகாப்பு ஒப்பந்தம் சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது. பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளாவிட்டால் பாகிஸ்தானுடன், இலங்கை இப்படியொரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுமோ என்ற அச்சமும் இந்தியாவுக்கு இருக்கிறது என்றார் பரமசிவம்.

அதுசரி சில தினங்களுக்கு முன் கொழும்புக்கு வந்த இந்திய வெளியுறவுச் செயலர் சியாம்சரண் திருகோணமலைக்குப் போய் பார்வையிட்டார். இலங்கையுடன் இந்தியா செய்துகொள்ளவிருக்கும் பாதுகாப்பு ஒப்பந்தத்தினால் ஈழத் தமிழ்மக்கள் அச்சமடையத் தேவையில்லையென்று சொல்லியிருந்தார். தமிழ் மக்களின் நலனில் இந்தியாவுக்கு அதிக அக்கறை இருப்பதாகவும் தெரிவித்திருந்தாரே கவனிக்கவில்லையா? என்று நான் கேட்டேன்.

ஓமோம், ஓமோம். தமிழ்மக்களின் நலனில் இந்தியாவுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதென்பதைத்தான் கடல்கோளினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக அரசும் புலிகளும் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு அமைப்பதில் உள்ள சிக்கல்கள் பற்றிக்கேட்டபோது பொதுக்கட்டமைப்பா, அதென்ன, ஏன், எதற்கு என்று சியாம் சரண் கேட்டாரே, அது போதாதா? என்று பரமசிவம் கேட்டார்.


உலக வல்லரசுகளுக்கும் பிராந்திய வல்லரசுகளுக்கும் உலக நாடுகளுக்கும் இப்போது இலங்கையில் தமிழ்மக்களின் அவலம் விளையாட்டாகப்போய்விட்டது என்று சொல்லிக் கொண்டே எழுந்து நடந்தார் பரமசிவம்.

இலங்கையில் தமிழ் மக்கள் உயர்பாதுகாப்பு வலயங்களினாலும் கடற்கோளினாலும் இருக்க இடமின்றியும் தங்கள் தொழில்களைச் செய்ய முடியாமலும் அவதிப்படுவதும் அல்லற்படுவதும் உலகநாடுகள் சிலவற்றுக்குப் பேச்சுக்குரிய விஷயமாக இருக்கிறது. இலங்கையிலோ சிங்கள மேலாண்மை வாதிகளுக்கு அரசியல் சித்து விளையாட்டுக்களமாய்க் காட்சியளிக்கிறது. தமிழ் மக்கள் சிலரோ போர் நிறுத்தத்தைப் பொழுது போக்காகக் கருதிச் செயல்படுகின்றனர். போராட்டத்தையும் போராட்டத்தில் தாயக மீட்புக்காகத் தியாகம் செய்வதர்களையும் இதற்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயல்படுபவர்களையும், மக்கள் மறந்துவிடக்கூடிய செயல்பாடுகள் அதிகரித்து வருகின்றன. மக்களை விழிப்படையச் செய்வது இன்று மிக அவசியம்போல் தெரிகிறது என்றேன்.

அதுசரிதான் என்று பலமாகத் தலையாட்டி விட்டுச் சென்றார் பரமசிவம்.

தி.உதயசூரியன்

# உலக செஞ்சிலுவை தினம்




*நேற்றைய தொடர்ச்சி...*

**செஞ்சிலுவைக் குடும்பம்**

செஞ்சிலுவை இயக்கமானது மூன்று பிரிவினர்களை ( **Three Components** ) கொண்டுள்ளது. அவையாவன :-

**(1)சர்வதேச செஞ்சிலுவைக் குழு**
**(International Committee of Red Cross- ICRC )**

இந்தக் குழுவானது சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு தனிநபரினால் உருவாக்கப்பட்டதாயினும், இதனுடைய தொழிற்பாடுகளும், முன்னேற்றங்களும் சர்வதேச மயமாகியுள்ளது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் உலகில் 60 நாடுகளில் சென்று வதி விடப் பிரதிநிதிகளாக கடமைபுரிகின் றனர். ஏறத்தாழ 15 ஆயிரம் ஊழியர்கள் கடமை புரிகின்றனர். இவர்களில் பலர் அந்தந்த நாட்டுப் பிரஜைகளாவர். செயற பாட்டுப் பிரதிநிதிகள் தமது முக்கிய கடமை களாக பாதுகாப்பளித்தல், யுத்தத்தில் அல்லது வேறு அனாத்தங்களினால பாதிககப்பட்டவர்களுக்கு உதவுவதோடு சகலவிதமான தடுப்பு நடவடிக்கைக ளையும் மேற்கொள்வர். மனிதாபிமான நடவடிக்கைகளில் உரியமுறையில் செயற படுததுவதற்காகவும், அண்டைய நாடுக ளில் நடைபெறும் அபாய நிகழ்வுகளை அறிந்து உரிய நேரத்தில் நடவடிக் கைகளை மேற்கொள்வதற்காக பிராந் திய பிரதிநிதிகள் முக்கிய நாடுகளிலி ருந்து செயற்படுகின்றனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒரு நாட்டில் வந்து செயற்பட வேண்டுமாயின், அந்தநாடு அழைப்புவிடும்பட்சத்திலேயே வந்து செயற்படமுடியும். இலங்கையிலிருந்து 1989 இல அழைப்பு கிடைக்கப் பெற்றுவருகை தந்து சேவையாற்றுகின் றது. கொழும்பில் தனது தலைமையகத் தையும் மற்றும் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு,கிளிநொச்சி,மடு,மல்லாவி, மூதூர்,புதுக்குடியிருப்பு,வவுனியா, திருகோணமலை. ஆகிய இடங்களில் உப-அலுவலகங்களையும் ஸ்தாபித்து பணியாற்றுகின்றது. யாழ்மாவட்டத்தில் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் தனது பணிகளை சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு அமைவாகவும், அடிப்படைக் கோட்பாடுகளுக்கமைவாகவும் போரி னால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், பாதிப படைந்த பகுதியை தரமுயர்த்துவதற் கும், நிவாரண உதவிகள் வழங்கியும் பல்வேறு உதவிகளைச் செய்தும் சிறப் பாக சேவையாற்றுகிறது.

சிறைக் கைதிகளின் பாதுகாபபுக்கும் இவர்களது பார்வை உதவுகிறது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக வும் சில பணிகள் ஆற்றுகிறது. செஞ்சி லுவை அமைப்பின் மூலாதாரங்களாக சர் வதேச செஞ்சிலுவை விளங்குகிறது.

2) செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம்
**(International Federation of Red Cross / Red Crescent -I.F.R.C )**

இந்தச் சங்கமானது 1919 இல் உருவாக் கப்பட்டது. தேசிய சங்கங்களுக்கு உத வும் கரங்களாக சம்மேளனம் திகழ்கிறது. தேசிய சங்கங்கள் தமது மனிதாபிமானப் பணிகளை மேற்க்கொள்வதற்கு நிதிவசதிகளை பெற்றுக்கொடுப்பதும், போரினால் அல்லது இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப் பட்டோருக்கு வேண்டியபணிகளைச் செய்து, வாழவியலை முன்னேற்றுவதற்கும், பிற தேசிய சங்கங்களிடமிருந்து உதவிக ளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் செஞ்சிலு வைச் சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு காலத்துக்குக் குக காலம் பயிற்சிகளை வழங்குவதும் இதன அடிப்படைக் கடமைகள் ஆகும். கொழும் பில் தலைமையகம் அமைத்து இலங்கை யின் தேசிய சங்கத்துக்கு மிகுந்த அனு சரணையாளர்களாகப் பணிபுரிகின்றனர்.

**(2)தேசிய செஞ்சிலுவை செம்பிறை சங்கங்கள்**
**(National Red Cross / Red Crescent Societies)**

அரேபிய நாடுகளில் செம்பிறையை உபயோகிக்க சட்டவலுவான உரிமை வழங கப்பட்டுள்ளது. 178 நாடுகளில் தேசிய சங் கங்கள் அமைக்கப்பட்டு இயங்குகின்றன. தேசிய சங்கங்கள் நிதி சர்வதேச செஞ்சி லுவைச் சங்கம். செஞ்சிலுவை சம்மேள னம், பிறதேசிய சங்கங்கள் மூலமாகப் பெற்றுச் செயற்படுகின்றன. இதனை விட சுயமாக நிதி மக்களிடமிருந்தும் சேகரிக் கப்படுவதுடன், வருவாய் ஈட்டக்கூடிய திட் டங்களை **(Fund Raising Project)** நடைமுறைப்படுத்துவதன் மூலமும் நிதியைப் பெறுகின்றனர். தேசிய சங்கங்கள் **(National Society)** அந்தநாடுகளின் அரசாங் கங்களுக்கும், மனிதாபிமானச் சேவைகளி லும் உடல்நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரண மறறும் தற் காலிக இருப்பிட வசதிகளையும் செய்து கொடுத்தல், வாழ்வாதாரத்துக்குத் தேவை யான சுகாதார வசதிகளைச் செய்து கொடுத் தல் போன்றவற்றுக்கு உதவுபவர்களாக் வும், அவர்களினால் செய்யாமல் விடப்படும் பகுதிகளில் அப்பேற்பட்ட சேவைகளை செய்பவர்களாகவும் சேவை புரிகின்றனர்.

**Auxiliaries**

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் **(Sri Lanka Red Cross Society)** எமது நாட் டில் தேசிய சங்கமாக விளங்கி, 1936 ஆம் ஆண்டில் இருந்து தற்பொழுது வரை சேவை யாற்றி வருகிறது. இதன் தலைமையகம் கொழும்பில் உள்ளது. ஒரு நாட்டில் ஒரு தேசிய சங்கமே **( One National Society)** இயங்கமுடியும். ஆனால் தேவைக்கு ஏற்ப கிளைகளை ஸ்தாபித்து இயக்கலாம். அதற்காக யாப்பு ரீதியாக அங்கீகாரம் அங் கத்தவரிடம் பெறப்பட வேண்டும். எமது நாட்டில் 25 மாவட்டங்களிலும் கிளைகள் அமைக்கப்பட்டு இயங்குவதனால், சிறப் பாக சேவையாற்ற முடிகிறது.

குறிப்பாக யுத்த மேகத்தில் சிக்கி அல லற்பட்ட மக்களுக்கு தேவையறிந்து சேவை யாற்ற முடிந்தது. யாப்பு ரீதியாக பிரிவுகள் தோறும் செஞ்சிலுவைச்சங்க செயற்பாடு களைச் செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் கிராம மட்டங்களிலேயே செஞ்சிலுவை அமைப்பைத் தோற்றுவித்து செயற்படவும், அங்கத்தவர்களை அதிகமாக இணைக்க வும் பூகோள ரீதியாக அலகுகளை ஸ்தா பிக்கவும், யாப்பு மூலம் அங்க்காரம் பெறப் பட்டு செயற்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 14 பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக செஞ் சிலுவைக் காரியாலயம் அமைத்து செயற் படுததப்படுகிறது. இந்தப் பிரிவுகளின் கீழ் அலகுகள் இயங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செஞ்சிலுவை இயக்கத்தினால் ஆற்றப் படும் சேவைகளுக்கும், நிவாரண விநியோ கங்களுக்கும், வருடம் ஒன்றுக்கு பலகோடிக் கணக்கான பணம் திட்டமிடப்பட்டு செல விடப்படுகின்றது. இந்த உதவிகள் உல கில பலபாகங்களிலும் வாழ்கின்ற எண்ணி லடங்கா மக்களுக்குப் போர்ச் சூழலிலும், சமாதான வேளைகளிலும் கூட அவர்களின் அருந்தற்பாடுகளைக் குறைக்கப் பயன்படுத் தப்படுகின்றன. அண்மையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு உதவி களை வழங்குவதில் செஞ்சிலுவை ஈடு பட்டு வருகின்றது.

செஞ்சிலுவை, அதன் மனித நல இலட்சி யங்களால் உந்தப்பெற்று, வழிநடத்தப்படு கிறது. அதன் செயல்கள், நடவடிக்கைகள் இதற்கான திட்டவட்டமான வெளிப்பாடாக அமைகின்றன. இந்த இயக்கம் தான் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கோ, இனத்துக்கோ, மதத்துக்கோ, பண்பாட்டுக்கோ உரியதன்று என்பதைக் காட்டும் வகையில் உலகம் முழுவதும் விரிந்து பரந்து கிடக்கின்றது. துன்ப அருந்தற்பாடு உலகப்பொதுவான தாக உள்ளது. துன்ப அருந்தற்பாட்டுக்கு ஆளானோர் எல்லோருக்கும் அவர்கள் எங் கிருந்தாலும்,உதவியும் பாதுகாப்பும் வழங் கச் செஞ்சிலுவை பாடுபடுகிறது.

1863ஆம் ஆண்டு இந்த இயக்கம் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கமாகப் பரிண மிக்கப்பட்டது. தற்போது உபயோகிக்கப் படும் செஞ்சிலுவைச் சின்னம் 1864 இல் தெரிவுசெய்யப்பட்டது. இந்தச் சின்னம் வெள் ளைநிறப் பின்னணியில் சிவப்பு நிறச் சிலுவை ஆகும். அரேபிய நாடுகளில் செம் பிறைச் சின்னத்தையும் இணைத்து இயங்க ஏற்றுக்கொள்ளப்பட்டது.

செஞ்சிலுவைச் சின்னத்தை தற்போது பல மட்டங்களிலும் பல இடங்களில் பிழை யான முறையில் உபயோகிப்பதன் மூலம், பலர் இந்தச் சின்னத்தின் உன்னதத் தன் மையை உணராதவர்களாக இருப்பதைக் காணககூடியதாக உள்ளது. செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகம் இது விடயமாகத் தனது அங்கத்துவ நாடுகளோடு தொடர்பு கொண்டு, பிழையான முறையில் உபயோ கிப்பதைத் தடுக்கும் நோக்கில் சட்டம் இயற் றித்தருமாறு கேட்டுள்ளது. அங்கத்துவ நாடுகள் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள் ளன.

**செஞ்சிலுவை அமைப்புக்கள் முக்கியமான 7 அடிப்படைக் கொள்கைகளை தன்னகத்தே கொண்டுள்ளன.**

(1)மனிதாபிமானம்
**(Humanity )**

மனித இனமானது அனுபவிக்கும் வேத னைகளைக் குறைப்பதற்கு அல்லது தடுப் பதற்கு முயற்சி எடுப்பதுடன் வாழ்க்கை,சுகா தாரம் என்பவற்றை பேணி அவர்களை கௌர வமாகவும் வாழ வழிசெய்வதும். மனித இனங்களிடையே கூட்டுறவையும், சகோத ரத்துவத்தையும், சமாதானத்தையும் ஏற்ப டுத்துவதே இதன் நோக்கமாகும்.

(2)பாரபட்சமின்மை
**(Impartiality)**

செஞ்சிலுவை அமைப்பானது இன, மத,மொழி,அரசியல் வேறுபாடின்றி மனித தேவைகளை உணர்ந்து செயற்படுதல்.

**(3) நடுநிலமை**
**(Neutrality)**

யாவரினதும் நம்பிக்கைக்கு பாத்திர மாகும் வகையில் யுத்தத்தின் போது எந தப் பக்கமும் சாராமல் நடுநிலமை வகித் தல்.

*(தொடரும்....)*

செய்திக் கட்டுரை

தர்ஜனன்

# கவனிப்பாரற்றுக் காணப்படும் பருத்தித்துறை நகர சந்தை

பருத்தித்துறை நகர சந்தை சுகாதார சீர்கேடான நிலையில் காணப்படுவதோடு, ஒழுங்கான பராமரிப்புகளுமின்றிப் பாழடைந்து, கால்நடைகளின் மேய்ச்சல் களமாகவும், கட்டாக்காலி நாய்களின புகலிடமாகவும் மாறிவருகிறது. பருத்தித்துறை நகர சந்தை வடமராட்சிப் பகுதியின் பல்வேறு பகுதி மககளினதும் தேவைகளை நிறைவேற்றும் சந்தையாக விளங்கி வருகிறது.

ஆனால் அண்மைக்காலமாக இந்தச் சந்தை அடிப்படை வசதிகளினறிய நிலையிலும், பாதுகாபபான சுற்றுவேலிகள் எதுவுமற்ற நிலையில் இயங்கி வருவதால், இங்கு வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதோடு, இங்கு வரும் பொதுமக்களும் பல்வேறுபட்ட அசௌகரியங்களையும் எதிர நோக்கி வருகின்றனர்.

இநதச் சந்தையின் சுற்று வேலிகள் சீரான முறையில் செப்பனிடப் படாது மோசமாகச் சேதமடைந்துள்ளன. இதனால் பகல் நேரங்களிலும், இரவு நேரங்களிலும் உள்நுழையும் கால்நடைகள் மரக்கறி வியாபாரிகளின் மரக்கறிகளைத் தின்பதால் நஷ்டம் விளைவிப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். அண்மையில் ஒரு வியாபாரியின் 1500 ரூபா பெறுமதியான மரக்கறி - நஷ்டம் ஏற்பட்டதாகக் கவலையுடன் தெரிவித்தார். மற்றும் கட்டாக்காலி நாய்கள் இரவு வேளைகளில் சந்தைக் கட்டடங்களுக்குள்ளே அசிங்கப்படுத்துவதாகவும், மறுநாட்காலை இவையெதுவும் பராமரிப்பவர்களால் துப்புரவு செய்யப்படுவதில்லை.

இந்தச் சந்தையில் அடிப்படை வசதியான மலசலகூட வசதிகள் எதுவுமில்லாத நிலையில், வியாபாரிகள் பெருஞ்சிரமங்களை எதிர நோக்குவதாகவும், குறிப்பாக இங்கே பல பெண் வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும், இவர்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தண்ணீர் வசதியைப் பொறுத்தவரையில் - இங்கு ஒரு கிணறு உள்ளபோதும், இந்தக் கிணறு பராமரிப்பவர்களால் கைவிடப்பட்ட நிலையில் பாழடைந்த நிலையிலுள்ளது. இதனால் இந்த வியாபாரிகள் அருகிலுள்ள கடைகளிலும், கோயில்களிலும் நீரைப்பெற வேண்டிய நிலையுள்ளது. தமக்குத் தேவையான நீர் வசதியை உரியவர்கள் உடனடியாக ஏற்படுத்தித்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவற்றைவிட குப்பை கூழங்கள் அகற்றப்படாது, சந்தை வளவினுள்ளே நிறைந்து சுகாதார சீர்கேடாகக் காணப்படுகிறது. பருத்தித்துறை நகரசபையின் பொறுப்பிலுள்ள இந்தச் சந்தை மிகவும் சிதைவடைந்து காணப்படுவதைப் பற்றி பருத்தித்துறை நகரசபைக்குப் பல தடவைகள் முறைப்பாடு செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை எனவும் இந்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சந்தைக் கட்டடங்களும பாழடைந்து, தற்காலிக தகரக் கொட்டகைகள் போல் காணப்படுகின்றன.

சந்தைப் பகுதியில் காவலாளி ஒருவரை நியமிக்குமாறு பல தடவைகள் விடப்பட்ட கோரிக்கை களும பருத்தித்துறை நகரசபை யால் "மேலிடத்திலிருந்து உத் தரவு இல்லை" எனத் தெரிவித் துத் தட்டிக்கழிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது பொருட்களின் விலை யேற்றத்தால் சந்தை நில வரி இருமடங்காக அதிகரித்த நிலையிலும், எமக்குப் போதிய இடவசதிகள் ஏற்படுத்தித் தரப் படவில்லை எனவும் அங்கு வியாபாரம் செய்யும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாம் எமது குடும்பத்தின் ஜீவனோபாயத்துக்காகவே வியாபாரததை மேற்கொண்டுவருகிறோம். இந்த நிலையில் எமக்கு நஷ்டங்களே ஏற்படுகின்றன.

நாம் வியாபாரத்தை நிறுத்தி ஒருநாள (ஏப்ரல் 25) பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தும் கூட, எமது நிலையை யாரும் கவனத்தில் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கும் இவர்கள், தமது வியாபார நடவடிக்கைகள் சிறப்பான முறையில் நடைபெற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# எகிப்திலுள்ள பிறதர்கூட் அமைப்பின் நான்கு முக்கிய உறுப்பினர்கள் கைது!



எகிப்தில் எதிர்க்கட்சியாக செயற்படும் முஸ்லிம் பிறதர்கூட் அமைப்பைச் சேர்ந்த நான்கு முக்கிய உறுப்பினர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் மிகவும் முக்கியமானவர் ஈசாம் அல் ஈறியன் என்பவரும் அடங்குவதாக இந்த அமைப்பின் பேச்சாளர் அப்துல் முனியம் மஃமூட் தெரிவித்தார்.

பிறதர்கூட் அமைப்பு எகிப்தில் தடைசெய்யப்பட்ட போதிலும், இதன் நடவடிக்கைகள் சிலவற்றை எகிப்திய அதிகாரிகள் சகித்துக்கொண்டே வந்தனர். கடந்த பெப்ரவரியிலிருந்து இந்த அமைப்பினர் எகிப்தில் ஜனநாயகத்திற்கு ஆதரவாக வாய்மொழி மூலமாக ஆதரவு திரட்டி வருகின்றனர்.

எனினும், எகிப்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்களின் வேட்பாளரை முதன் முதலாக போட்டியிட ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் உடன்பட்டிருந்தார்.

கடந்த புதன்கிழமை எகிப்தில் அரசாங்கத்துக்கெதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் தமது அமைப்பைச் சேர்ந்த 1562 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பேச்சாளரான மஃமூட் தெரிவித்தார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மிகவும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்களை விட மேலும் 100 பேர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விமான விபத்தில் 18 பேர் பலி!


அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற விமான விபத்தில் விமான ஓட்டிகள் மற்றும் 15 பயணிகள் உட்பட 18 பேர் உயிரிழந்தனர்.

குறித்த இந்த விமானம் அவுஸ்ரேலிய கன்பராவில் உள்ள விமான நிலையத்தில் பயணிகளை ஏற்றிக்கொண்டு குயீன்ஸ்லாந்து நோக்கி பறப்பினை மேற்கொண்டிருந்த வேளை பலத்த காற்று வீசியது.

இதனையடுத்து ஏற்பட்ட மோசமான வானிலை காரணமாக விமானம் கட்டுப்பாட்டை இழந்து சிறிது நேரத்தில் அது தரையில் மோதி நொருங்கியது. விமான்ம் விழுந்த வேகத்தில் பாகங்கள் சிதறிக் காணப்பட்டதுடன், இந்தப் பாகங்கள் தீப்பிடித்து எரிந்தன.

இப்பகுதி அடர்ந்த காட்டுப் பகுதியாகையால் அந்தப் பகுதிக்குள் செல்வதில் சிரமங்கள் உள்ளதனால் மீட்பு பணியாளர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று சேரவில்லை.

# பர்மாவில் குண்டுவெடிப்பு; 11 பேர் பலி, 162 பேர் காயம்!



(யாங்குன்)

முன்பு பர்மா என அழைக்கப்பட்டு வந்த மியான்மார் நாட்டில் ராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு ஜனநாயக ஆட்சியை கொண்டுவரும்படி ஜனநாயக மீட்பு இயக்கம் போராடி வருகிறது.

இந்த நிலையில் பல்வேறு தீவிரவாத இயக்கங்கள் ராணுவ அரசுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் தலைநகர் யாங்குன் உட்பட 3 இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர்.

யாங்குன் நகரிலுள்ள கலாசார மையத்தில் தாய்லாந்து வர்த்தக கண்காட்சி நடைபெற்றது. இதையொட்டி அங்கு கருத்தரங்கமும் நடைபெற்றது. அப்போது அங்கு திடீரென குண்டுவெடித்ததில் கலாசார மையம் இடிந்து வீழ்ந்து கண்காட்சிக்கு வந்தவர்கள் பலர் பலியானார்கள்.

சிறிதுநேரத்தில் அங்குள்ள 2 சந்தைகளிலும் திடீரென்று குண்டுகள் வெடித்தன. இந்த 3 குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 11 பேர் பலியாகினர். 162 பேர் காயமடைந்தனர். பலியானவர்களில் மியான்மார் நாட்டவர்கள் மட்டுமன்றி தாய்லாந்து நாட்டவர்களும், புத்தமத துறவியும் அடங்குவர்.

இதேபோன்ற குண்டுவெடிப்புகள் தொடரும் என்று கிளர்ச்சிவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# அணுகுண்டு பரிசோதனையை வடகொரியா நடத்தமாட்டாது!

## அமெரிக்கா தெரிவிப்பு

வடகொரியா அணுகுண்டுப் பரிசோதனை என்ற பெயரில் நாடகம் ஒன்றை நடத்துவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அணுகுண்டை வெடிக்கவைக்கும் நிலையில் வட கொரியா இல்லை எனவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் உளவு செயற்கைக் கோள்கள் வடகொரியாவில் அணுகுண்டுகளைப் பரிசோதிப்பதற்காக குழிகள் தோண்டப்படுவதையும், பின்னர் அவை மூடப்படுவதையும் படம் பிடித்துள்ள நிலையில் அமெரிக்க அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வடகொரியா அணுகுண்டை பரிசோதிப்பது உறுதியாகி விட்டதென ஜப்பான் தெரிவித்துள்ளது.

# ஆறு புதிய அமைச்சுக்களுக்கு ஈராக் நாடாளுமன்றம் அனுமதி!

ஈராக்கிய அரசியல்வாதிகள் குழுவினால் பிரேரிக்கப்பட்ட 6 அமைச்சரவைக்கான பெயர்களை அந்த நாட்டு நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளது.

ஏழு அமைச்சர்களுக்கான பதவியில் ஒன்றைத் தவிர மிகுதி ஆறையும் இவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாக பிரதமர் இப்ராஹிம் ஜபாரி தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் மூன்று பிற பதவிகள் சுனி முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டது. இந்தப் பதவிகள் சுனி முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டமையானது – அதிகரித்துவரும் தாக்குதல்களை தடுப்பதற்கான ஒரு முயற்சியென பி.பி.சி செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கிலுள்ள சிரிய எல்லைப் பகுதியில் அமெரிக்கப்படையினர் நடத்திய தாக்குதலில் 6 கிளர்ச்சிவாத சந்தேக நபர்கள் உயிரிழந்ததுடன் – 54 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே போக்குவரத்து



அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியான யோபா யாசின் தனது காரில் பயணம் செய்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவருடன் இவரது கார்ச்சாரதியும் கொல்லப்பட்டார்.

# நேபாள முன்னாள் பிரதமர் நிவாரண நிதியில் மோசடி!

நேபாளத்தின் முன்னாள் பிரதமர் ஷேர் பகதூர் டூபா ஏற்கனவே கைது செய் யப்பட்டு சிறையிலுள்ளார். அவர் அரசுப்பணத்தை சுரண்டி கட்சி ஆதரவாளர்களுக்கு கொடுத்தார் என்று ஊழல் எதிர்ப்பு குழு தற்போது குற்றஞ்சாட்டியுள்ளது.

மன்னர் கயனேந்திரா கடந்த பெப்ரவரி மாதம் அவசரகால நிலை பிரகடனம் செய்த போது பிரதமரான ஷேர் பகதூரின் ஆட்சியைக் கலைத்தார்.

அதற்கு முன்பு அவர் பிரதமராக இருந்தபோது பிரதமர் நிவாரண நிதியில் இருந்த பணத்தை எடுத்து கட்சி





ஆதரவாளர்களுக்கு வழங்கினார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் நடந்த இந்துத் திருவிழாவின்போது அவர் நேபாளி காங்கிரஸ் (ஜனநாயகப் பிரிவு) கட்சியினருக்கு அரசுப் பணத்தை வாரிவழங்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை ஊழல் கட்டுப்பாடுச் சபை கூறியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை ஆதாரம் இல்லாதது என்றும், ஷேர் பகதூரின் நற்பெயருக்கு களங்கம் எற்படுத்தும் நோக்கத்தோடு கூறப்படுவதாகவும் நேபாளி காங்கிரஸ் கட்சியினர் கூறினர்.

அவருக்கு என்ன தண்டனை விதிக்கப்படும் என்பது தெரியவில்லை. பிணையில் விடுதலை செய்யப்பட வேண்டுமானால் 27 லட்சம் ரூபா பணம் கட்ட வேண்டும் என்று ஊழல் கட்டுப்பாட்டுச் சபை கூறியுள்ளது. இதைக் கட்டிவிட்டு பிணையில் வெளியே வர ஷேர் பகதூர் மறுத்துவிட்டார்.



காத்மண்டுவிற்கு தண்ணீர் கொடுப்பதற்கான குடிநீர் திட்டத்துக்கு ஒப்பந்தகாரர் நியமிப்பதிலும் ஷேர் பகதூர் முறைகேடாக நடந்து கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக ஷேர் பகதூரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


## மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும்
கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன்
யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு, வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும் அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

இடம் : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம்: 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை (புதிய நேரம்)
(வார இறுதி நாட்களும் விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக் கழிவு

தொடர்புகளுக்கு:-
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ் - பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
(சி/4105)


# பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்!

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஜியோப் ஹூன் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக ஜோன் ரெய்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமராக மூன்றாவது முறையாக வெற்றிபெற்றுள்ள ரொனி பிளேயர் தனது அமைச்சரவையை நேற்று முன்தினம் மாற்றியமைத்துள்ளார்.

முந்தைய அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த பிரமுகர்கள் அனைவருக்கும் முக்கிய பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ரொனி பிளேயருக்கு அடுத்த இடத்தை வகித்துவரும் கோர்டான் பிரவுன் நிதியமைச்சராகத் தொடர்ந்தும் பதவிவகிப்பார். வெளியுறவு அமைச்சராக ஜக்ஸ்ரோ நீடிப்பார்.

துணைப் பிரதமர் பதவியை வகித்துவரும் ஜோன் பிரஸ்காட் - வெளியுறவு அமைச்சர் பொறுப்பையும் கூடுதலாக கவனிப்பார்.

கல்வி அமைச்சராக ரூத் கெல்லியும், உள்துறை அமைச்சராக சார்ள் கிளார்க்கும் தொடர்ந்தும் செயற்படுவர்.

முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ஜோன் ரெய்ட் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சராக இருந்து வந்த ஜியோப் ஹூன் பிரபுக்கள் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு 645 தொகுதிகளில் நடைபெற்ற தேர்தலில் 644 தொகுதிகளுக்கான முடிவுகள் வெளியாகிவிட்டன.

இதில் ரொனிபிளேயர் தலைமையிலான தொழிற்கட்சி 355 இடங்களையும், கொன்சவேட்டிவ் கட்சி 192 இடங்களையும், லிபரல் ஜனநாயகக் கட்சி 62 இடங்களையும், பிற கட்சிகள் எஞ்சிய இடங்களையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


மனோகரா யாழ்ப்பாணம்
சரத்குமார், அறிமுகம் ரமேஷ், பூஜா, கலாபவன் மணி மற்றும் பலர் நடித்த
சத்யன்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்
சந்திரமுகி
4வது வெற்றி வாரமாக
(C/3979)
காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00, 10.00

ராஜா யாழ்ப்பாணம்
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி, மணிவண்ணன், விவித் நடித்த
பிரியமானதோழி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30
12 முதல்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பிரகாஷ்ராஜ் மற்றும் புதுமுகங்கள்
அறிந்தும் அறியாமலும்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# படைப் பயிற்சி போராளிகளிடையே 60 கி.மீ. சைக்கிள் ஓட்டப் போட்டி!





(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சிக் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 60 கிலோமீற்றர் சைக்கிளோட்டப் போட்டி ஒன்று நேற்று நடைபெற்றது.

நேற்றுக்காலை 6 மணியளவில் பரந்தன் சந்தியிலிருந்து ஆரம்பமான இந்தப் போட்டி - முல்லைத்தீவில் நிறைவடைந்தது.

போர்ப்பயிற்சிக் கல்லூரித் தளபதி ஆதவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பெண் போராளிகளுக்கான போட்டியை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷாவும், ஆண் போராளிகளுக்கான போட்டியை தளபதி ஆதவனும் ஆரம்பித்துவைத்தனர்.

# அடிகாயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு!

கைதடி - நூணாவில் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கடுமையான அடிகாயங்களுக்குள்ளான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காதநிலையில் நேற்று மரணமடைந்தார்.

கைதடி - நுணாவிலைச் சேர்ந்த கந்தையா தவச்செல்வம் (வயது44) என்பவரே மரணமடைந்தவர் ஆவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - உயிரிழந்த மேற்படி நபர் ஓட்டோ சாரதி எனவும், இவர் வேறொருவருடன் காணிப்பிரச்சனை தொடர்பாக அண்மைக்காலமாக முரண்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. மேற்படி நபர் நேற்று முன்தினம் க.தவச் செல்வத்தைக் கடுமையாக தாக்கியதாகவும், இதனால் உட்காயம் அடைந்த க.தவச்செல்வம் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமடைந்தார். சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இ.சிவரூபன் என்பவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதிவரை தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்தவரின் சடலம் வைத்தியபரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சம்பவம் கொலை என சந்தேகிக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

# ஈரலிப்பான நிலத்திலிருந்து மர்மமான புகைமண்டலம்!

## காலியில் சம்பவம்

காலி-அஹுங்கம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஈரலிப்பான தரையிலிருந்து மர்மமான முறையில் புகைமண்டலம் வெளிப்பட்டதை அந்தப் பகுதி மக்கள் அவதானித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மர்மமான புகைமண்டலம் பூமியிலிருந்து கிளம்பியதையடுத்து தரைப்பகுதி மற்றும் தேங்கியிருந்த நீர்நிலைகளில் வெப்பநிலையில் அதிகரிப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இந்த அசாதாரண நிகழ்வு குறித்து புவியியல் நிபுணர்கள் கருத்து வெளியிடுகையில் -

இது தொடர்பாக மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இப்படியான நிகழ்வு சுனாமி தாக்குதலுக்குப் பின்னர் சில இடங்களில் ஏற்படுவது சாதாரண விடயமேயெனத் தெரிவித்தனர்.

# சிறைக்கைதிகள் போராட்டம் நேற்றுடன் முடிவுற்றது!



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உள்ள கைதிகள் கூரை மீது ஏறி நான்கு நாட்களாக நடத்தி வந்த போராட்டம் நேற்றுக்காலை கைவிடப்பட்டது.

மேற்படிகைதிகள் தம்மை விடுவிப்பது தொடர்பாக மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மை சந்திக்க வேண்டும் என கோரிக்கை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயானந்தமூர்த்தி, தங்கேஸ்வரி, அரியநேந்திரன் ஆகியோர் நேற்றுக் காலை சிறைச்சாலைக்குச் சென்று உண்ணாவிரதிகள்ள சந்தித்து பேச்சு நடத்தினர்.

இதற்கமைய மேற்படி நபர்களின் பிரச்சினை தொடர்பாக சட்ட மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்து விடுதலை செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

இந்த உறுதி மொழியை ஏற்றுக் கொண்ட உண்ணா விரதிகள் தமது போராட்டத்தை கைவிட்டனர். இதனைத்தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு நீராகாரம் கொடுத்து உண்ணாவிரதத்தை நிறுத்தி வைத்தனர்.

# புலிகள் தீர்க்கமான...

ஜனாதிபதியின் நிலைப்பாடு குறித்து நாங்கள் நிச்சயமாக சந்தேகிக்கிறோம்.

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் இப்படியான அறிவிப்புக்கள் மாறி மாறி வருவது அவருடைய வரலாறாக இருக்கிறது. ஜனாதிபதியின் வாயிலிருந்து வருவது எதுவும் நடைமுறைக்கு வந்ததாக நாங்கள் இந்த வரலாற்றில் காணவில்லை.

எமது மக்கள் மனிதாபிமான அவலத்தைச் சந்தித்திருக்கும் இந்த வேளையில், அரசாங்கத்தின்போக்கு தமிழ்மக்களை மிகவும் விரக்திக்குள்ளாக்கி வருகிறது என நினைக்கிறேன். மக்களுடைய நிலைப்பாடுகளை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

நிச்சயமாக எங்கள் தலைமைப் பீடம் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலையை நோக்கி நெருங்கிக்கொண்டுள்ளது. தற்பொழுது காலக்கெடுவைக் குறிப்பிடாவிட்டாலும் நிலைமைகள் மிகவும் இறுக்கமடைந்து வருகின்றன .

புலிகளின் விமானப்படை குறித்து இந்தியா வெளிப்படுத்திய அச்சம், கவலைகள் எங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ஏனெனில், 50 வருடங்களுக்கு மேலாக - தமிழ் மக்கள் பாரிய இனப்படுகொலைகளையும், இடப்பெயர்வுகளையும், பெரும் அவலங்களையும் சந்தித்துள்ளனர்.

எமது மக்கள் போராடி எமது தலைவரின் காலத்திலேயே இந்த உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்து, எமது தாயகத்திலே ஒரு சுயாட்சியைக் கட்டியெழுப்பி, இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து எமது பெரும்பாலான பிரதேசங்களை மீட்டு, நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடிய அளவுக்கு எமது மக்களின் நிலை முன்னேறிக்கொண்டிருக்கிறது.

இந்தநிலையில் நாங்கள் சுயமாகக் கட்டியெழுப்பியுள்ள கட்டமைப்புக்கள், படைக்கட்டுமானங்கள் எல்லாம் எமது மக்களின் சுயபாதுகாப்புக்கானவை. எந்தவிதத்திலும் அயல்நாடுகளுக்கு - குறிப்பாக இந்தியாவுக்கோ அல்லது ஒரு இனத்துக்கோ, தேசத்துக்கோ அச்சத்தையோ அச்சுறுத்தலையோ ஏற்படுத்தும் நோக்கோடு அவை கட்டியெழுப்பப்படவில்லை.

இந்தியாவின் பாதுகாப்புக்கு புலிகள் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளனர் என்ற கருத்து முற்றிலும் தவறானவை. ஏனெனில், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் ஜனநாயக நீரோட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டிருக்கிறார்கள். எமது இராணுவக் கட்டமைப்பென்பது எங்கள் மீது திணிக்கப்படுகின்ற இராணுவ ஆக்கிரமிப்பு, இராணுவ நெருக்குவாரங்களிலிருந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்கு கட்டியெழுப்பப்பட்டிருக்கிறதே தவிர, நாங்கள் ஜனநாயக நீரோட்டத்தைப் புறந்தள்ளி ஒரு இராணுவ ரீதியான அணுகுமுறைக்காக கட்டியெழுப்பப்படவில்லை.

இந்திய மக்களோ, இந்திய தேசமோ எந்தவொரு மக்களும் இதற்கு அச்சப்படத் தேவையில்லை. இது முழுக்க முழுக்க தமிழ்மக்கள் தமது தற்பாதுகாப்புக்காகவும் , தங்களின் தாயகத்தின் பாதுகாப்புக்காகவும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. எங்களை இது தொடர்பாக தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும் என்று நாங்கள் வேண்டிக்கொள்கிறோம்.

கிழக்குப் பகுதியின் எல்லைப் புறங்களில் இராணுவ முகாம்களின் பாதுகாப்புக்குள் இருந்துவிட்டு இராணுவப் புலனாய்வு அமைப்பைச் சேர்ந்தவர்களும், அவர்களால் அமர்த்தப்பட்ட கூலிக்கும்பல்களும் வந்து தாக்குதலைச் செய்துவிட்டு உடனடியாக இராணுவ முகாம்களுக்குள் மறைந்துவிடுகின்றனர்.

இது எல்லைப்புறங்களில்தான் நடக்கிறது. அங்கு வாழும் மக்கள் இதைத் தெளிவுபடுத்துகிறார்கள். மட்டக்களப்பில் எங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்.

ஆங்காங்கே சில பகுதிகளுக்குள் ஊடுருவி வந்து தாக்குதல் நடத்திவிட்டு இராணுவ முகாம்களுக்குள் பதுங்கிக்கொள்கிறார்கள்.

இதைக் கண்காணிப்புக்குழுவுக்கு தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆதாரங்களுடனும் சுட்டிக் காட்டியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் காவலரண் மீது மீண்டும் துப்பாக்கிச்சூடு!

திருகோணமலை - மூதூர் கட்டைபறிச்சானில் உள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் சரமாரியான முறையில் மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளினதும் - இராணுவத்தினரதும் எல்லையோரக் காவலரண்களுக்கு இடைப்பட்டதான கட்டைபறிச்சான் பாலத்தடியில் இருந்தே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட திசையை நோக்கி விடுதலைப் புலிகள் பதிலுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் அவர்களைத் துரத்திச் சென்றவேளை அவர்கள் தப்பியோடிவிட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

கடந்த வியாழன்றும் விடுதலைப் புலிகளின் காவலரண் மீது இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கட்ட...

அத்துடன் விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால், அரசாங்கத்துக்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்காது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது .

"உண்மையின் ஆவியார் நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடாத்துவார்."
(யோவான்16:13)

தூய ஆவியார் பெருவிழா

15.05.2005 யாழ்.மரியன்னை பேராலய வளாகத்தில்

இந்தியாவிலிருந்து வருகை தரும்
கத்தோலிக்க புதுவாழ்வு செபக்குழுவைச் சேர்ந்த
அருட்திரு சகாய ஜான், சகோ.இருதயசாமி
ஆகியோரின் வழிநடாத்துதலில் வழிபாடுகள் நடைபெறும்



ஆயத்த வழிபாடுகள்
11.05.2005 புதன்
12.05.2005 வியாழன்
13.05.2005 வெள்ளி
தினமும் மாலை 5.30 மணி முதல் 7.30 மணி வரை



திருவிழிப்பு ஆராதனை
14.05.2005
சனி இரவு 8 மணி முதல் ஞாயிறு அதிகாலை வரை
(ஞாயிறு அதிகாலை 4.30 மணிக்கு திருப்பலியுடன் திருவிழிப்பு ஆராதனை நிறைவடையும்.)

தூய ஆவியின் அருட்பொழிவால் நிறைந்து
வாழ்வின் கட்டுக்களிலிருந்து விடுதலை பெற்று மகிழ்வுடன் புதுவாழ்வு வாழ
நீங்களும் வாருங்கள்! மற்றவர்களையும் அழைத்து வாருங்கள்.

13.05.2005 வெள்ளி காலை 9 மணி முதல் 1 மணிவரை
கச்சேரி – நல்லூர் வீதியிலுள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில்
குணமாக்கல் வழிபாடும் நடைபெறும்.

இறை தியான குழுவினர் (சி-4109) ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005

# பொருளியல் - I

ஆசிரியர் -
V.G.R.Rageswaran (B.com)

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01) சந்தை அமைப்புக்களிலே கடுமையான விளம்பரத்தைக் கொண்ட சந்தை ?

1) நிறைபோட்டிச்சந்தை 2) நிறைவில் போட்டிச்சந்தை
3) சிலருரிமைச்சந்தை 4) தனியுரிமைச்சந்தை
5) தனியுரிமைப் போட்டிச்சந்தை

02) பொருள் வேறுபடுத்தல் என்பது எச்சந்தையின் பிரதான அம்சமாகும்?

...................................................................

03) சந்தை அமைப்புக்களில் எதிர்நடவடிக்கை என்பது எச்சந்தைக்குரிய இயல்பாகும் ? வினா

(01) இன் விடையில் இனம் காண்க.

(1) (2) (3) (4) (5)


04) பின்வரும் கேள்விக் கோடுகள் எச்சந்தையுடன் தொடர்புடையது என்பதை இனம் காண்க?

1) சாதாரண கேள்விக்கோடு ..............................
2) முறிந்த கேள்விக்கோடு ..............................
3) கிடையான கேள்விக்கோடு ..............................

05) நடைமுறைக்கு அனேகமாக பொருந்தக்கூடிய சந்தை அமைப்புகள்?

1) நிறைபோட்டி 2) சிலருரிமை 3) தனியுரிமைபோட்டி
4)எல்லா சந்தை அமைப்புக்களும்

06) சந்தை ஒன்றில் கேள்வியும், நிரம்பலும் சமனாக காணப்பட்ட போது சந்தைவிலை ரூபா 20 ஆகும். மேற்படி நிலமையை மிகை கேள்விக்கோட்டினால் காட்டுக?



07) கிபன் பண்டமொன்றின் பிரதான இயல்பு யாது?

1) விலை மாறும்போது கேள்வி மாறாது இருக்கும்.
2) வருமானத்துடன் கேள்வி எதிர்த்தொடர்பைக் கொண்டது
3) விலையுடன் கேள்வி நேர்த்தொடர்பைக் கொண்டது
4) ஒரு வகை தரம் குறைந்த பொருள்

08) பதிலீட்டுப்பொருள் ஒன்றின் விலைக்கும், கேள்வித் தொகைக்கும் இடையிலான தொடர்பு?

1) நேரானது 2) எதிரானது 3) பூச்சியம் 4) முடிவிலி

09) பதிலீட்டுப்பொருள், இணைப்பொருள் என்பவற்றின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு கேள்விக் கோட்டினை முறையே எவ்வாறு நகர்த்தும்.

1) வலதுபுறம், வலதுபுறம் 2) வலதுபுறம்
3) வலதுபுறம், இடதுபுறம் 4) இடது, வலதுபுறம்

10) **Qd = 1000 – 10p** ஆயின் 10 ரூபா விலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி யாது ?

...................................................................

11) பின்வரும் அட்டவணையின் இடைவெளியை நிரப்புக.

12) பின்வரும் பொருட்களின் நெகிழ்ச்சியை இனம் காண்க?

1) உப்பு :- ..............................
2) கார் :- ..............................
3) மரக்கறிவகை :- ..............................
4) கோவா :- ..............................

13) வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சியின் 3 வகைகளையும் தருக.

1) ............................................................
2) ............................................................
3) ............................................................

14) பின்வரும் நெகிழ்ச்சிக் குணக பெறுமதியினை படத்தில் குறித்துக் காட்டுக?

1) ES = 1 2) ES > 1 3) ES < 1 4)ES = 0

15) **QD = 500 – 10P** என்ற கேள்விக் கோட்பாட்டிற்குரிய ஒருமை நெகிழ்ச்சிக்குரிய விலை எது?

1) 50 ரூபா 2) 10 ரூபா 3) 25 ரூபா 4) 100 ரூபா

16) பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?

1) தனியுரிமையுடன் ஒப்பிடும் போது தனியுரிமைப்போட்டியில் நெகிழ்ச்சி குறைவு

2) தனியுரிமைப்போட்டி ஆகக் குறைந்த சராசரிச் செலவிலும் பார்க்க குறைந்த வெளியீட்டைச் செய்யும்

3) நிறைபோட்டி நிறுவனம் எல்லைச்செலவு எல்லைவருமானத்திற்கு சமனாகும் போது மட்டுமே இலாபத்தை உச்சப்படுத்தும்

4) நிறைபோட்டி நிறுவனம் ஆகக் குறைந்த சராசரி செலவினைவிட குறைந்த அளவினை நீண்ட காலத்தில் வெளியீடு செய்யும்.

17) விலைசார் கேள்விநெகிழ்ச்சி அதிகரிக்கும்போது வரிச்சுமையில்

1) நுகர்வோன் > உற்பத்தியாளன்
2) நுகர்வோன் < உற்பத்தியாளன்
3) நுகர்வோன் = உற்பத்தியாளன்
4) நுகர்வோன் மட்டும்

18) **Qd = 20 – 2p, QS =10 + 2P** எனின் அலகு வரியாக 2 ரூபா விதிப்பின் புதிய சமநிலை விலை , தொகையாது ?

...................................................................

19) சந்தைத் தோல்வி என்பது..................................................
...................................................................
...................................................................

20) மானியம் வழங்கும் போது நிரம்பல் சமன்பாடு எவ்வாறு மாற்றமடையும்?
QS = ..........................................

## பகுதி - II

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து எல்லாமாக இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி - அ

01) **i.** நிறைபோட்டிச் சந்தையில் உள்ள நிறுவனம் ஒன்று ஏன் விலையினை ஏற்கும் நிறுவனமாக உள்ளது.

**ii.** விலை பேதப்படுத்தல் என்றால் என்ன? இது எச்சந்தையமைப்பின் பிரதான இயல்பாகும்?

**iii.** தனியுரிமை நிறுவனத்தின் சிறப்பியல்புகளைத் தருக?

02) **i.** கேள்வி விதிக்கு முரணான நடத்தைகளைக் குறிப்பிடுக.

**ii.** நுகர்வோன் மிகை என்பதனால் கருதப்படுவது யாது ? படத்தில் விளக்குக?

**iii.** சிகரட்டுக்கான வழங்கல் வளையி இடதுபுறம் நகருவதாகக் கொள்க. எக்காரணிகள் இதனை ஏற்படுத்தியிருக்கலாம்.

### பகுதி - ஆ

03) **i.** நேரான கேள்விக்கோடு ஒன்றின் வழியே நெகிழ்ச்சி 0 - முடிவிலிவரை ஏன் மாறுகின்றது விளக்குக.

**ii.** உற்பத்திப்புள்ளியினூடாக செல்லும் நிரம்பல் வளையி ஒன்று தன் முழு வீச்சிலும் ஒருமை நெகிழ்ச்சியை எவ்வாறு கொண்டிருக்க முடியும் என்பதனை விளக்குக.

**iii.** விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின் பயன்பாடுகள் 5 தருக.

04) **i.** பண்டம் ஒன்றின் மீது இறக்குமதி தீர்வை விதித்தால் சந்தை சக்திகளில் எத்தகைய மாற்றம் ஏற்படலாம் என்பதனை விளக்குக.?

**ii.** கேள்வியின் விலை நெகிழ்ச்சி என்பதனை வரையறுத்து, அதனை எவ்விதம் கணிப்பது என்று கூறுக?

**iii.** குறித்த பண்டம் இரண்டு தொடர்பான தகவல்கள் வருமாறு தரப் படுகின்றது. பண்டங்களை இனம் கண்டு விளக்குக.

| | பண்டம் A | பண்டம் B |
|---|---|---|
| விலைசார் கேள்வி நெகிழ்ச்சி | - 2.0 | - 0.5 |
| வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி | 1.5 | 0.3 |

குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி பூச்சியம் ஆகும்.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005

# பொருளியல் - II

ஆசிரியர் -
V.G.R.Rageswaran (B.com)

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக

(1) விரிந்த பணம் என வகைப்படுத்தக்கூடிய சேர்க்கைகளை இனம் காண்க.

i. தாள் நாணயமும், நாணயங்களும்.

ii. சட்டப்பணமும், வர்த்தக வங்கியிலுள்ள கேள்வி வைப்பும்.

iii. சட்டப்பணமும் வர்த்தக வங்கியிலுள்ள கேள்வி , சேமிப்பு நிலையான வைப்பும்.

iv. வங்கியல்லா நிதி நிறுவனங்களிலுள்ள சேமிப்பு , நிலையான வைப்புக்களும் மேலே (111) இல் தரப்பட்டவையும்.

(2) வர்த்தக வங்கிக்கும், சேமிப்பு வங்கிக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காண்க?

i. வர்த்தக வங்கிகள் மட்டுமே மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் வருகின்றன

ii. வர்த்தக வங்கி மட்டுமே பணவாக்கம் செய்யமுடியும்.

iii. சேமிப்பு வங்கி மட்டுமே பலவகைப்பட்ட சேமிப்புக்களையும், நிலையான வைப்புக்களையும் கொண்டிருக்கும்.

iv. வர்த்தக வங்கி மட்டுமே காசோலை மூலம் மாற்றக்கூடிய கேள்வி வைப்புக்களைக் கொண்டிருக்கும்.

(3) கீழ்வரும் மத்திய வங்கி செயற்பாடுகளில் பண நிரம்பலில் குறைவினை ஏற்படக்கூடிய செயற்பாடுகள் யாவை?

i. வங்கி வீதத்திலான குறைப்பு.

ii. திறந்த சந்தையில் பிணைப்பத்திரங்களின் விற்பனை.

iii. வர்த்தக வங்கியில் இழிவுமட்ட ஒதுக்குத் தேவைகளை அதிகரித்தல்.

iv. சந்தையில் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்தல்.

(4) பணக்கொள்கை என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

i. பணவீக்கத்ததை கட்டுப்படுத்துவதற்காக அரசு வரவு - செலவு திட்டப் பற்றாக்குறையைக் குறைத்தல்

ii. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற பொருளாதார இலக்குகளை அடைவதற்காக பணநிரம்பல் , பணச்செலவு என்பவற்றை ஒழுங்குபடுத்தல்.

iii. போதுமான திரவத்தன்மை விகிதத்தை உறுதிப்படுத்த வர்த்தக வங்கிகளுக்கு கடன் வழங்கல்.

iv. பொதுமக்களது வைப்புக்கள் பாதுகாப்பாக இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள, வர்த்தக வங்கிகளது நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

(5) உம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றுக்களை இனங்காண்க?

i. பணத்திற்கான திரவத் தேய்வு என்பது பணக்கேள்வியைக் கருதும்.

ii. பொதுமக்களிடம் இருந்து வைப்புக்களாகப் பெறப்படும் பணத்தை மட்டுமே வர்த்தக வங்கிகள் கடனாக வழங்க முடியும்.

iii. ஒரு வர்த்தக வங்கி அதன் சொத்துக்களைத் தீர்மானிக்கும் போது திரவத்தன்மையும், இலாபத்தன்மையும் சமப்படுத்துகின்றன.

iv. மத்திய வங்கியானதுஅரசு வங்கிகள் மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களிடம் இருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்றன.

(6) பணவீக்கத்தின் பொருளாதார் விளைவுகளை இனங்காண்க.

i. சேமிப்புக்களை ஊக்கப்படுத்துகின்றது

ii. மெய்வட்டி வீதத்தினை உயர்த்துகின்றது

iii. வாழ்க்கைச் செலவினை உயர்த்தி, மெய்க் கூலியினை வீழ்ச்சியடையச் செய்கின்றது.

iv. உள்நாட்டு விலைகளின் உயர்வுகாரணமாக இறக்குமதி கவர்ச்சிகரமானது ஆகவும், ஏற்றுமதி குறைந்த போட்டித் தன்மையுடையதாகம் அமைகின்றது.

(7) நாணயத்தளம் என்பதனை உள்ளடக்கும் கூற்றுக்களை இனங்காண்க

i. பொதுமக்களிடம் உள்ள காசு

ii. மத்திய வங்கியினதும், வணிகவங்கியினதும் மொத்த வைப்புக்கள்.

iii. மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கியினதும், ஏனைய நிதிநிறுவனங்களினதும் வைப்புக்கள்.

iv. வணிகவங்கி வசமுள்ள நோட்டுக்களும், நாணயங்களும்.

v. மத்திய , வணிக வங்கிகளின் முக்கிய சொத்துக்களை குறிக்கும்.

(8) பின்வருவனவற்றுள் இடைவெளிகளை நிரப்புக

i. பணப்பெருக்கி = ..........................

..........................

ii. பணவாக்கப் பெருக்கி = 1 / ..........................

(9) மொத்தப் போலிப்பணம் என்பதனைக் குறிக்கும் உள்ளடக்கங்களை இனங்காண்க

i. உள்நாட்டு, வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் சேமிப்பு, தவணை வைப்புகள்

ii. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளில் சேமிப்பு தவணை வைப்புகள்

iii. வணிக வங்கியின் வரிந்த பணநிரம்பல்

iv. 25 நிதிக்கம்பனிகள்

v. மத்திய , நிதிவங்கிகளின் கேள்வி , சேமிப்பு , தவணை வைப்புகள்

(10) கொழும்பு நுகர்வோன் விலைச்சுட்டியின் பொருட்தொகுதியையும் நிறையிடைகளாகத் தருக?

| இலக்கம் | பொருட்தொகுதி | நிறை |
|---|---|---|
| 1 | .................... | ........ |
| 2 | .................... | ........ |
| 3 | .................... | ........ |
| 4 | .................... | ........ |
| 5 | .................... | ........ |

## பகுதி II

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஒரு வினாவைத் தெரிவு செய்து மொத்தமாக இருவினாக்களுக்கு விடை தருக.

### பிரிவு (அ)

(1) i. வணிக வங்கி ஒன்றில் 5 வகை சொத்துக்களையும் திரவத்தன்மை ஒழுங்கில் தருக.

ii. பணத்தின் சுழற்சி வேகம் என்பதன் முக்கியத்துவத்தை தருக?

iii. பண நிரம்பலில் ஏற்படும் மாற்றம் கட்டாயமாகவே பணவீக்கத்திற்கு வழிகோலும் என்பது பற்றிக் கருத்துரைக்க.

(2) i. மத்திய வங்கியின் முக்கிய பொறுப்புக்களை விளக்குக.

ii. மத்திய வங்கி நாட்டின் பணநிரம்பலை ஒழுங்குபடுத்த பகிரங்கச் சந்தை நடவடிக்கையை எவ்விதம் பயன்படுத்துகின்றது?

iii. பணத்தினது பெறுமான இழப்பானது பணத்தின் தொழிற்பாடுகளை எவ்விதம் பாதிக்கும்?

(3) i. வரவு - செலவுத்திட்ட நடைமுறைக்கணக்கு மீதி என்றால் என்ன? அதன் முக்கியத்துவத்தைத் தருக?

ii. அரசாங்க சேமிப்பு என்பதன் நடைமுறை முக்கியத்துவம் யாது?

iii. இலங்கையின் நடைமுறைச்செலவில் உள்ளடக்கங்களைக் குறிப்பிட்டு, அதன் போக்கினை விபரிக்குக?

(4) i. வரவு - வெலவுத்திட்டத்தின் ஊடாக அரசு பொருளாதார உறுதிப்பாட்டினை எவ்விதம் அடைகின்றது?

ii. 2004 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் வருமான வரி விதிப்பு எவ்விதம் அமைந்துள்ளது?

iii. பற்றாக்குறை பாதீட்டின் சாதகமான விளைவுகளைத் தருக?